நவமணி.

உள்நாடு ரூ 1

வெளிநாடு ரூ $1\frac{1}{2}$

எல்லாம் தெய்வச் செயல்



ஆசிரியன் சி. ரா. ம இராமநாதன்

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR, RAMNAD Dt. S. INDIA.

Vol. 2. பிரஜோற்பத்தி-வரு புரட்டாசி-மீ No 9.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள் வணக்கம்.	321
2.	தாலுகா கமிட்டி அறிக்கை (காரியதரிசி.)	322
3.	மதச்சடங்கும் மிதச் செலவும் (தலையங்கம்) பத்திராதிபர்:—	323
4.	புராதன ஆலயங்களும் தேவமாதர்களும். (உபதலையங்கம், பத்திராதிபர்.	330
5.	அன்பு:— ஸ்ரீராமன் எழுதுவது.	333
6.	கோவில்களில் தேவதாசிகள்:— ஸ்ரீமதி. முத்துலக்ஷ்மி யம்மாளவர்கள்.	337
7.	திருப்பத்தூர் தாலுகா காங்கிரஸ் சபை கூட்டம்:— காரியதரிசி.	340
8.	மணியொளி (குறிப்பு) பத்திராதிபர்.	343
9.	விகடத்துணுக்குகள்.	348
10.	மதிப்புரை.	350
11.	கனகவல்லி-அல்லது கள்வர்கவர்ந்த கன்னிகை:- கோவை சி. கு. நா. அவர்கள்.	353
12	நாற்றிசை நடப்பு.	357

தீபாவளி வருகிறதே!

நீங்கள் அந்நியத் துணி வாங்கப்போகிறீர்களா? அது பாவம். கதரையே வாங்குங்கள். அது கிடைக்கவில்லையாயின் காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற இந்திய மில் துணியாகிய சுதேசித் துணியையே வாங்குங்கள்.

20 NOV 1981

கடவுள் வணக்கம்.

தானன தானன தானன தந்தத்
தானன தானன தானன தந்தத்
தானன தானன தானன தந்தத் தனதான.

தோலொடு மூடிய கூரையை நம்பிப்
பாவையர் தோதக லீலைநி ரம்பிச்
சூழ்பொருள் தேடிட ஓடிவ ருந்திப் புதிதான
தூதொடு நான்மணி மாலைப்ர பந்தக்
கோவையு லாமடல் கூறிய முந்தித்
தோமுறு காளையர் வாசல்தொ றும்புக் கலமாருங்
காலனை வீணனை நீதிகெ டும்பொய்க்
கோளனை மானமி லாவழி நெஞ்சக்
காதக லோபவ்ரு தாவனை நிந்தைப் புலையேனைக்
காரண காரிய லோகப்ர பஞ்சச்
சோகமெ லாமற வாழ்வுற நம்பிற்
காசறு வாரிமெய்ஞ் ஞான தவஞ்சற் றருளாதோ
பாலன மீதும னுன்முக செம்பொற்
பாலனை மோ தப ராதன பண்டப்
பாரிய மாருதி தோள்மிசை கொண்டுற் றமராடி
பாவியி ராவண னார்தலை சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக் கினியோனே
சீலமு லாவிய நாரதர் வந்துற்
றீதவள் வாழ்புன மாமென முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரிதோய்வா
சேலொடு வாளைவ ரால்கள்கி ளம்பித்
தாறுகொள் பூகம ளாவிய இன்பச்
சீரலை வாய்நகர் மேவிய கந்தப் பெருமாளே.

திருப்பத்தூர் தாலுகா காங்கிரஸ்

கமிட்டி அறிக்கை.

ஒவ்வோர் கிராம காங்கிரஸ் கமிட்டியாரும் கமிட்டி ஏற்படுத்தியதும் பதிவுசெய்துகொள்ள வேண்டுவதுடன் ஒவ்வோர் மாதமும் சேர்ந்த அங்கத்தினர்களைத் தமிழ்மாதக் கோடியில் தாலுகா கமிட்டிக்கு அனுப்பிவிட வேண்டுகிறோம்.

ஒவ்வோர் கிராமத்திலும் மறியல் ஏதும் நடத்துவதாகவிருந்தால் ஆரம்பிக்கும்பொழுதும் நிறுத்தும் பொழுதும் தாலுகாக் கமிட்டிக்குத் தகவல் கொடுத்துச் செய்வதே நலமாக விருக்கும்.

காங்கிரஸ் வேலைகள் ஒழுங்காக நடைபெற கிராம கமிட்டிகள் தாலுகா சபையுடன் ஒத்துழைப்பது சிறந்தமார்க்கமாக விருக்கும். அங்ஙனமே கிராமகமிட்டிகள் ஒத்துழைக்கவேண்டுகிறோம்.

பள்ளத்தூர்.
16–10–31

காரியதரிசி.
திருப்பத்தூர் தாலுகா காங்கிரஸ் கமிட்டி.

'நவமணி' சந்தாதார்களுக்கு அறிவிப்பு.

மத்தியில் நவமணிக்குச் சந்தாதாரராகச் சேர்ந்த சிலருக்கு வருட முடிவாகிறபடியால் வி. பி. யனுப்பிக்கொண்டு வருகிறோம். தயவுசெய்து வி. பி. யைப் பெற்று என்றும்போல் நவமணியை ஆதரிக்க வேண்டுகிறோம். சந்தாதார்களின் வருவாய் கொண்டும் அபிவிர்த்தி பற்றியுமே பத்திரிகையின் சிறப்பு அமைந்துள்ளபடியால் சந்தாதார்கள் யாவரும் வி. பி. வருமுன் பணம் அனுப்புதல் நலம். இல்லையாயினும் வருகிற வி. பி. யை யாகிலும் ஆதரித்தல் கடமையாகக் கொள்ளவேண்டுகிறோம்.

பள்ளத்தூர்.
17–10–31.

மானேஜர்.
"நவமணி" பத்திரிகாலயம்.

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவ மணி.'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. பாரதியார்.
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ரு ரனைத்திலர் பாடு. திருவள்ளுவர்.

மாலை 2. } பள்ளத்தூர் பிரஜோற்ப, புரட்டாசி { மணி 9.

மதச் சடங்கும் மிதச் செலவும்.

நமது இந்திய நாட்டில் சிறப்பாகத் தமிழ்நாட்டுக் கிராம ஜனங்கள் மதத்தின் பெயரால் ஆலயங்களிலும் கல்யாணம் கர்மாதிகள் முதலிய சடங்குகளிலுஞ் செலவழிக்கும் பணத்திற்கோர் எல்லை இல்லை. பணம் படைத்தோர் மட்டும் இக்காரியங்களில் இறங்குவதோடு ஏழைமக்களுக்கும் இதற்கும் சம்மந்தமில்லாது போய்விடுமாயின் நாம் இத்துறையில் இன்று எழுத இடமிருந்திருது. அவ்வாறன்னியில் இச்சடங்குகளும் இவ்வாலயக் கோளாறுகளும் ஆலயச் செலவுகளும் பெரிதும் ஏழைகளையே பாதிக்கின்றமையால் அதுபற்றிச் சிறிது ஆருய்வது வீணென நமது வாசகர்கள் மதியாரென்ற உறுதிகொண்டு அத்துறையில் செல்லுகின்ருேம்.

ஃ ஃ ஃ

நாம் பல கிராமங்கள் சுற்றுப்பிரயாணஞ்செய்ய நேர்ந்த காலையில் உலகியலோ, கல்விப்பயிற்சியோ போதிய அளவு பெறப்

படாத பல ஏழைகள் மதத்தின் பெயரை வைத்துக்கொண்டு புனிதமான இந்து மதத்திற்கு மக்களை எண்ணினும் இந்துக் கடவுளை எண்ணமுடியாதவாறு அளவற்ற குட்டித் தெய்வங்களை சிருஷ்டித்துக்கொண்டு புராதன பெரிய எண்ணமாகிய கடவுள் ஒன்றே என்ற எண்ணத்தைச் சிலர் அடியோடு மறந்தும் மறக்காத சிலர் அதை அலக்ஷியஞ்செய்தும் வாழ்கின்றனர். இராஜன் ஒருவனுயினும் அரசியல் நடத்துவதற்குப் பல பிரிவுகள் கொண்ட உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு அவசியமோ அதேபோல் தெய்வம் ஒன்றே யாயினும் அதற்குப் பல உத்தியோக உதவித் தெய்வங்கள் வேண்டுமென வாதாடுபவர்களுஞ் சிலரிருக்கின்றனர். தெய்வங்களின் பெயரைச்சொல்லி வயிற்றுப்பிழைப்பு நடாத்தவேண்டிய தன் நிமித்தம் ஓவ்வோர் தெய்வத்திற்கும் புராதன புராணங்களுக்கும் சம்மந்தஞ்செய்யும் ஓர் சாராருமுள்ளனர்.

ஃ ஃ ஃ

ஒருவரே கடவுள் என்பதை உலகம் நன்கறிந்திருப்பினும் உலகத்திலே அதிகமான மக்களைக் கொண்டு ஒரோர்வழியில் சிறிது வேறுபாடு பற்றி அவ்வபிப்பிராய பேதங் காரணத்தால் தங்கள் தங்கள் கொள்கைகளுக்குத் தக்கவாறு சட்டதிட்டங்களை அமைத்துக்கொண்டு கடவுள் வழிபாட்டையும் கடவுள் நாமத்தையும் சிறிது சிறிது மாற்றி அமைத்துவாழுங் கூட்டங்களுக்கே மதக்கோஷ்டிகள் எனப் பெயர். அம்மதக் கோஷ்டிகளுங் கூட சில உட்பிரிவை ஒவ்வோர் மதங்களிலும் வைத்துக்கொண்டு ஒவ்வோர் உட்பிரிவும் ஒவ்வோர் தெய்வத்தையே தங்கள் முதல்வனெனவும் அம்மதஸ்தர் யாருவும் ஒப்புக்கொள்ளும் ஒன்றையே தங்கள் ஆதித்தெய்வமெனவும் அமைத்துக்கொண்டிருந்தாலும் நலமாகவிருக்கும். அவ்வாறல்லாமல் உலகில் கடவுள் ஒருவரே என்பதை நன்ருக ஒப்புக்கொள்ளும் அறிவுபடைத்த உயர்ந்த விவேகிகளுங்கூட பொதுக்கடவுளைவிட்டுப் பின்னர் ஒவ்வோர் மதஸ்தரும் வாதாடும் மதக்கடவுள் பாலும் அதன் உட்பிரிவினர் கொண்டாடும் குட்டிக் கடவுள்கள் பாலும் தனித்தனியே நினைத்தபடி யெல்லாம் வைத்துக்கொள்ளும் சில்லரைக் கடவுள்கள் பாலும் நம்பிக்கைவைத்தோ, அன்றித் தங்கள் அறிவை விர்த்தி செய்துகொண்டால் போதும்; ஏழைகள் எவ்வாறு போனலென்ன

என்ற அபிப்பிராயத்தாலோ, சில ஏழைமக்கள் சண்டையிட்டு மனக்குளப்பம் பெறுதலைத் தாங்கள் கண்டுகளிக்க வேண்டுமென்ற ஆசைபற்றியோ கடவுளால் நமக்களிக்கப்பட்ட பகுத்தறிவை வேண்டுவார் வேண்டும் வண்ணம் கண்டவாரெல்லாம் உபயோகித்துப் பணக்காரர் சிலரோ பலம்பெற்றோர் சிலரோ வேண்டுகின்றபடி எல்லாம் தெய்வங்களை அமைத்து அவையனைத்திற்கும்பாடல்களும் மஹத்துவங்களும் கூறிவைத்துவிட்டனர்.

ஃ ஃ ஃ

இப்பாடல்களையும் பழஞ்சுவடிகளையும் வைத்துக்கொண்டுள்ள கிராமத்தார் சிலர் தனித்தனியே ஒன்றுகூடி ஒவ்வோர் கிராமத்திலும் எண்ணற்ற தெய்வங்களை சிருஷ்டித்துக்கொண்டு மதத்தின் பெயரால் மனிதனொருவன் சம்பாதிக்கும் பணத்தில் பாதிக்குமேல் மதச் சடங்கிற்கும் கடவுள் செலவிற்கும் ஒதுக்க வேண்டிய நிலைவரவே பலரும் சம்பாதிக்க இடமில்லாமல் திண்டாடுகிறார்கள். இவர்களுக்கு சம்பாத்தியம் வந்தாலும் வராது போயினும் போதிய அளவு மதக்காரியங்களிலும் கடவுள் செயல்களைக் கொண்டாடுவதிலும் கடன்வாங்கியேனும் செலவுசெய்ய வேண்டும். அவ்வாறு செலவுசெய்யாது போயின் அவன் மதத்துரோகியாயும் நாஸ்திகனாயும் கர்மத்துரோகியாயும் ஆவதாக எண்ணப்படுவதோடு பல பிரமுகர்களான வைதீகர்களின் தூற்றுதலுக்கும் காரணஸ்தனாவான். இத்தியாதி காரியங்களுக்காக ஏழையாய்ப்போன குடிகளும் கடன்காரர்களாகப்போன குடிகளும் தமிழ்நாட்டுக் கிராமங்களில் எண்ணற்றுக் கிடக்கின்றன.

ஃ ஃ ஃ

குட்டித்தெய்வங்களை சிருஷ்டித்து அரசியல் நடைபெறுதற்கு சில்லரை உத்தியோகஸ்தர்கள் வேண்டுவதுபோல் உலகியல் நடைபெறுதற்கு எல்லாம்வல்ல எம்பிரான் ஒருவரின் கீழ் பல குட்டித் தெய்வங்கள் வேண்டுமென எண்ணினால் அது நமது கடவுளுக்கு நாம் பலவீனம் கற்பிப்பதுபோலாகும். அதுபோயினும் போகட்டுமென சில குட்டித்தெய்வங்களை வைத்துக்கொண்டு அதற்குத் தகுந்த மரியாதையையும் அந்தஸ்தையுங் கொடுங்கள்; அந்தத் தெய்வங்களுக்கும் அளவு ஏற்படுத்துங்கள் என்று சொன்னால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டில் எவ்வாறு நிர்வாகஸ்

தானங்கள் புதிது புதிதாக உற்பத்தி செய்யப்பட்டு வேலை யில்லாதுபடித்துத்திண்டாடும் பலரும் பூர்த்திசெய்ய ஏற்பாடாகிற தோ, அதேபோன்று தினம் புதிய புதிய தெய்வங்கள் சிருஷ்டி யாவதிலேயே தான் கண்ணுங் கருத்துஞ் செலுத்தப்படுகிறதே யல்லாமல் ஒருவர்கண்டு கொண்டாடி க்ஷீணித்துள்ள ஆலயங்களி லுள்ள கடவுள் பெயரை மீண்டுங் கொண்டாடக் கிராமஜனங்கள் துணிவதில்லை. அவர்கள் கொண்டாடுவதிலும் தமிழ்நாட்டிலுள்ள எல்லா இந்துக்களும் சாதாரணமாகக் கொண்டாடும் ஊர்காவலன் நொட்டிக்கருப்பன், சாமுண்டி, காளியாயி, ஐயனர் பேச்சியத் தாள் முதல் பல நாமம் பூண்ட கிராம அம்பிகைகள் வைரவர் விநாயகர் சுப்பிரமணியர் விஷ்ணு சிவன் முதலிய எல்லா நாமஸ்தர் களுக்கும் ஒரே அந்தஸ்தையும் ஒரே பிரார்த்தனையையுமே வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நைவேத்தியம் பூஜனை வழி பாடு முதலியவற்றிற்கும் ஒரு அளவு கிடையாது. கொண்டாடு பவன் குடிகாரனயின் சாமிக்குக் குடி வஸ்துதான் படைப்பான் இரண்டு பெண்டாட்டிக்காரனயின் சாமிக்கும் இரண்டு பெண் டாட்டிக்குப் புராணஞ்செய்யப் பலவகையிலுஞ் செலவு செய்து புராண மொன்று செய்து முடிப்பான். இவன் கொலைசெய்பவ னயின் சாமியையுங் கொலைகாரனுக்கிவிடுவான். இவன் நடைக் கெல்லாம் அவன் கொண்டாடும் தெய்வத்தையுந்திருப்ப முயற்சிப்ப துடன் அவ்வாறே ஊராரையும்கொண்டாடும்படியும்ஏற்பாடுசெய்து கட்டுப்பாடுசெய்துவிடுவான். கதியற்ற ஏழைமக்கள் அதற்கிணங்கி வரிகட்டவும் தனக்கு சோற்றுக் கில்லையாயினும் கடவுளுக்கு அபி ஷேகஞ் செய்யவும் குட்டி வெட்டவும் பந்துக்களை அழைத்து வரவும் திருவுலாச் சொல்லவும் கடன்வாங்கப் பின்வாங்குவதில்லை.

ஃ ஃ ஃ

ஏன் ஒருவர் கொண்டாடி க்ஷீணித்துப்போன ஆலயங்களை மீண்டுங் கொண்டாடுகிறதில்லை என கிராமஜனங்களைக் கேட்டால் நமக்குப்போல் தெய்வங்களுக்கும் ஜாதகமுண்டு. அந்த எல்லை கடந்து க்ஷீணித்துவிடுமாயின் பின் அந்த தெய்வங்களைக் கொண் டாடக் கூடாதென்று சிலரும் அந்தத் தெய்வத்தை எவனே மந்திரத்தினல் கட்டிவிட்டான்; அல்லது சூன்யம் வைத்துவிட் டான் என்று சிலரும் சொல்லுகிறார்கள். தங்களுக்கென நன்மை

சம்பாதிக்க இறைவன் துணைமூலம் வழிதேட முடியுமென்ற நம்பிக்கைகொண்ட மக்கள் தங்கள் குறைகளை க்ஷமித்துத் தங்களுக்கு நல்வழி காட்டக்கூடிய எந்த ஒருபரம்பொருளொண்டோ அதைக் கடவுளாகக் கொண்டாடுவதா? நம்போன்ற மனிதன் ஒருவனுக்குப் போல் ஜாதகம் பெற்று நல்வினை, தீவினையை அனுவிப்பதும் பிறனொருவனல் கட்டுப்படுத்தப்படக்கூடியதுமான ஒன்றைக் கடவுள் எனக் கொண்டாடுவதா? இதை மக்கள் சிறிது சிந்திக்க வேண்டுகிறோம். மக்களின் நலன் வேண்டிக் கொண்டாடப்படும் தேவ ஆலயங்களால் அதை வழிப்படும் மனிதனுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாததாயும் அவனவனும் தன் தன் வருமானத்திற்குத் தகுந்தவாறு சிறிது செலவிடினும் அதுகண்டு திருப்தியடையக்கூடியதுமாக உள்ள ஒன்றையே மனிதன் கடவுள் தன்மையில் வைத்துக்கொண்டாட வேண்டுமே யல்லாமல் ஒருவன் தனக்கொன்று செய்யவில்லை எனக் குறை கேட்க்கக்கூடியதான ஒன்றைக் கடவுள் தன்மையில் கொண்டாடுதல் சிறிதும் பொருத்தமற்ற விஷயமாகும்.

ஃ ஃ ஃ

ஏழைக் கிராமவாசிகள் பலரும் தங்கள் வீட்டில் ஏதேனும் சிரமமாக விருப்பதாக உணர்ந்தாலும் எவருக்கேனும் நோய்வரினும் உடனே ஜோதிஷனையோ, சாமியாடி என்பவனையோ உடுக்கடிப்பவனையோ குறிகாரனையோ தேடிவிடுகிறார்கள். அவர்கள் உடனே தங்கள் அனுபவங்களைச் சொல்லி இவர்கள் வாய்ப்பிறப்பிலிருந்து அறிந்ததை வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு தெய்வம் கோளாறு கேட்பதாயும் பீடையென்றும் முடிவு கட்டிவிடுகிறார்கள். அதற்காக அவன் உடனே அந்தத் தெய்வசாந்தி வேண்டி பெல்லி கொடுத்துச் சிறப்புச் செய்வானாயின் அந்தத் தெய்வ கிருபையால் குணமும் க்ஷேமமு முண்டாகுமென முடிவும் செய்துகொள்ளுகிறார்கள். அதன்படியே செயலிலும் செய்கிறார்கள். இதனால் பூரண குணம் பெற்ற குடும்பம் ஏதாவது ஒன்றுண்டா என்று கேட்டால் அதுதான் சந்தேகம். இவ்வாறாக மக்களைக் கோளாறு கேட்பதாகக் கடவுள் பேரில் பயம் ஏற்படுவதும் அந்த ஸாந்திக்காக மீண்டும் தீமையையே செய்யப்புகு

வதும் இவை எல்லாம் ஏழைமக்களின் கோளைச் செயலாலும், ஸாமியாடி பூசாரி, குறிகாரன் முதலியவர்கள் பால் பாமர கிராம ஜனங்களும் படித்தும் அறிவுமயக்கங் கொள்ளும் சில பண்டிதர் களும் வைத்துள்ள பிரேமையாலுமேயாம். இவை அனுபவத்தில் பல்வேறு வழிகளிலும் உழைப்பினுலும் ஒழுக்க நடையுடை பாவனைகளாலும் சம்பாத்தியமும் சுகமும் பெற்றுக் கடவுளைத் தியானஞ் செய்யவேண்டும் என்ற அறிவாளிகள் முன் எவ்வளவு தாழ்ந்த அபிப்பிராயத்தில் நடைபெறுஞ் செயல் என்பதைப் பகுத்தறிவு பெற்ற அறிஞர்கள் யோஜித்துத் தங்கள் கிராமவாசி களைத் திருத்த முற்படவேண்டுகிறோம்.

ஃ ஃ ஃ

பெரும்பாலும் இத்தியாதி தெய்வ நம்பிக்கையும் தெய்வக் கோளாறுகளும் ஏழைமக்களிடையே தான் உண்டாகின்றன. பணக்கார னொருவனுக்கு ஏதாயினும் நோய்வரின் உடனே வைத்தியரை கூப்பிடுவான். சிகிச்சை செய்யச் சொல்லுவான். கஷ்டம்வரின் இதர பணக்காரர்களைக்கொண்டு கஷ்டநிவர்த்திக்கு வழிதேடுவான். தெய்வநம்பிக்கை உள்ள பணக்காரனுக இருந்தா லும் அவன் எண்ணம் இவ்வழியில் ஏழைகள் மனம் திரும்புவது போல் அவ்வளவு சுலபமாகத் திரும்புவதில்லை. ஆனுல் ஏழை களோ தங்கள் அறியகாலத்தில் இத்தியாதி பயத்தினுலும் சாமி யாடி பூசாரிகள் பேரிலுள்ள நம்பிக்கையால் அவர்கள் வார்த்தை களுக்கெல்லாம் மதிப்புக் கொடுப்பதாலுமே தங்கள் காலத்தையும் வீணுக்கி அறிவுமயக்கம் பெற்று சிரமத்தையும் தரித்திரத்தை யும் வலிய வரவழைத்துக் கொள்ளுகிறுர்கள்.

ஃ ஃ ஃ

எப்பொழுதும் எவரும் கடவுள் நம்பிக்கைகொள்ள வேண் டும். கடவுள் பிரார்த்தனை முதலியன செய்யவேண்டும் என்பது தகுதியேயாயினும் அவரவர்களும் அதற்கென ஒரு கடவுளையே நிச்சயித்துக்கொள்ளவேண்டும். தங்கள் தங்கள் வேலைநேரங் களுக்குத் தகுந்தவாறு அதற்குக் காலத்தையும் ஒதுக்கவேண்டும். நல்ல வழிகளில் ஒழுங்காகக் காலந்தள்ள வேண்டும். இவ்வாறு பழக்கம் செய்துவரும்பொழுது நோய்வரின் நல்ல வைத்தியனைத் தேடவேண்டும். நோய்வந்த காரணங் கண்டு மீண்டும் அத்தவறு

நடவாதிருக்கப் பார்க்கவேண்டும். இதைவிடுத்து ஸாமியாடிக்கும் மந்திரக்காரனுக்கும் உடுக்கடிப்பவனுக்கும் மதிப்புக்கொடுத்து அவன் வழி சென்றால் நமது வாழ்நாள் பல வகையிலும் சஞ்சல முற நேரிடும்.

ஃ ஃ ஃ

மேல்நாட்டவர் தங்கள் வருவாயை மிகுதிப் படுத்திப் புதிய புதிய தொழில் கண்டு தன்னம்பிக்கையையும் திடகாத்திர சரீரத்தையும் விர்த்திசெய்துகொண்டு பணந்தேடி எல்லா நவ நாகரீகங்களையு மனுபவித்துவரும் இந்நாளில் நாம் பழைய புராண மஹத்துவங்கூறி விஞ்ஞன முறையில் நம்மை அழிவுசெய்யும், அறிவை மயக்கும் எண்ணற்ற குட்டித் தெய்வங்களைச் சிருஷ்டித்துக்கொண்டு புராதன மதத்தின் பெருமைக்கும் கடவுள் ஒருவரே என்ற தத்துவத்திற்கும் ஹானியை உண்டு செய்து மதச்சடங்குகளுக்காக மிதச் செலவுசெய்து வறியர்களாவது கிஞ்சிற்றும் நியாயமற்ற வழியாகும். கடவுள் வழிபாடு வேண்டுமாயினும் மதக்கட்டுப்பாடு வேண்டுமாயினும் நமது விர்த்திமார்க்கத்திற்கு ஏதுவான வழியில் அவைகளை அனுசரிக்க வேண்டுவது தான் புத்திசாலித்தனமாகும். அறிஞர்கள் இவ்வகைகளை நன்றாக ஆராய்ச்சிசெய்து கிராமஜனங்களுக்கு இவ்வகையில் ஸ்திரமான மனதேற்படச் செய்யவேண்டுகிறோம்.

காந்தி ஜயந்தி.

கவிஞர் தாகூரின் பொன்மொழி.

"அந்நியரின் ஆட்சியைவிட, நமது இந்தியர்களிடம் சதா குடிகொண்டிருக்கும், பகுத்தறிவின்மை, மூடநம்பிக்கை, ஜாதிக் கட்டுப்பாடு, மதாசாரப் பிடிவாதம், முதலியவைகளே நமது தேச விடுதலைகளுக்கு எமன்களாக இருக்கின்றன. இவைகளை ஒழிக்காமல் ஓட்டுரிமைகளுக்காக எவ்வளவு தூரம் நாம் கதறினாலும் இந்தியாவுக்கு விடுதலை கிடையாது.

நமக்குப் புனிதவாழ்க்கையையும் விடுதலை நோக்கத்தையும் அளித்த மகாத்மாவின் பிறந்ததினத்தில் நாம் நினைக்கவேண்டிய முக்கியமான விஷயம் இதுவே.

மகாத்மாஜி தனது தூய வாழ்க்கையைத் துணையாகக் கொண்டு நம்மிடமிருந்த சோம்பேரித்தனத்தையும், அவநம்பிக்கையையும் விரட்டியதால் நாம் நமது தேச முன்னேற்றத்திற்கு விரோதமாக இருக்கும் இடையூறுகளை நீக்கி சீக்கிரமாக விடுதலை பெறுவதில் தடையில்லை."

——

புராதன ஆலயங்களும்

தேவமாதர்களும்.

இந்தியாவின் பொதுஸ்தலங்களில் பொதுவாகவும் தமிழ் நாட்டு ஸ்தலங்களில் சிறப்பாகவும் வைக்கப்பட்டுள்ள தேவமாதர்கள் புராதன காலந்தொட்டு கடவுள் தொண்டுசெய்வதற்காகவும் ஆலய அதிகாரிகளையும் ஆலய தர்ம கர்த்தாக்களையும் ஆலய ஊழியர்களையும் திருப்திப்படுத்துவதற்காகவும் வைக்கப்பட்டு அதனால் பல்வேறு ஆலயங்களில் நடந்த துன்மார்க்கச் செய்கைகளும் கொலைகளும் பாதகச் செயல்களும் ஒழுங்கீனங்களும் கணக்கிலடங்காமல் நடந்துள்ளன. அக்கால ஆலய தர்மகர்த்தாக்களும் பணக்காரர்கள் சிலரும் நகரங்களிலுள்ள தலைமையான மனிதர்கள் பலரும் தாங்களும் இவ்வக்கிரமச் செய்கைகள் நடப்பதைப்பட்டவர்த்தனமாயும் தினந்தோறும் அறிந்துவந்தார்களாயினும் அம்மாதர்கள் தங்களைக் களிப்புறச் செய்வதற்கும் உபயோகமாக விளங்கினார்களாகையால் அவர்களை எதிர்ப்பாரின்றி எவ்வகையான அக்கிரமங்கள் நடப்பினும் அத் தேவமாதர்கள் என்ற துன்மார்க்கிகள் கையே மேலோங்கி அக்கூட்டத்தை வேரறுக்கவொய முடியாதவாறு ஒரு வகையில் அக்கூட்டம், வளர்ந்துகொண்டே வந்தது. தேவாலயங்களில் அக்கூட்டப் பெண்களிருப்பதால் தேவாலயங்கள் பலவகையிலும் பரிசுத்தக் குறைவுபடுவதுடன் தேவாலய ஊழியர்கள், தலைமை யதிகாரிகள் தர்மகர்த்தாக்கள் யாவரும் மிகக் கெட்டுப்போவது விர்த்தியாகிக் கொண்டே வருகிற தென்பதை நன்கறிந்த சீர்திருத்தப் பிரசாரக் கழகத்தார் முயற்சியால் கட்டாயமாகத் தேவாலயங்களில் தாசிகளை வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாது; அவர்களுக்கு மானிப மேதும் அவர்கள் ஊழியத்திற்காக தேவாலய சொத்துக்களிலிருந்து கொடுக்கப்பட்டிருப்பின் உடனே விசாரணைசெய்து பட்டாப்போட்டு அவர்களுக்குப் பட்டா சார்பு செய்து வரிவாங்கும் வழக்கத்தில் வைத்துக்கொண்டு அவர்கள் தேவாலயங்களில்

ஊழியஞ்செய்தலை நிறுத்திவிட வழிதேடும்படி சட்டங்கள் செய்யப்பட்டுள்ளன என்பது யாவரும் அறிந்த விஷயம். அந்த சட்டப்படி தேவஸ்தானக் கமிட்டியார் பலவிடங்களிலும் விசாரணை நடத்தியும் பலவிடங்களில் பட்டாசார்பு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தும் வருகிற இந்நாளில் சில பெரிய தேவஸ்தானங்களில் உள்ள பண்டாரசந்நதி என்றழைக்கப்படுவோரும் சில உத்தியோகஸ்தர்களும் அது விஷயத்தில் எவ்வளவு நியாயமாக நடந்து இதை எவ்வளவு சீக்கிரம் ஒழிக்கவேண்டுமோ அவ்வளவு சீக்கிரமான ஏற்பாட்டை எடுத்துக்கொள்ளவில்லை. பல நாளாக அநுபவித்து வந்த இந்தப் பெரிய சுதந்தரத்தை இப்பொழுது அவர்கள் இழப்பதென்றால் கொஞ்சம் மனம் நோகும்போல் தோன்றுகிறது. இனி எவ்வளவு தாமதப்படுத்தினும் இவ் அக்கிரமமான செய்கையை ஆலயங்களின்பேரில் தேவாலய நிதியைக்கொண்டு வளர்த்துவருவதைப் பொதுமக்கள் பார்த்துச் சகிக்கமாட்டார்கள். வீண் தாமதமேற்படுத்தாமல் புதிய சட்டப்படி கோவில் தர்மகர்த்தாக்கள் ஒவ்வோர்வரும் இத் தீயபழக்கம் தங்கள் கோவிலில் நின்றது; தங்கள் கோவிலில் முதலில் நின்றது என்ற பெயர் உண்டாக வேண்டுமென்ற முறையில் முனைந்து உடனே தேவாலயங்களிலுள்ள இத் துன்மார்க்கிகள் கூட்டமாகிய தேவமாதர்கள் கூட்டத்தைக் கலைத்துவிடுவார்களாயின் பின்னர் அவர்கள் தெய்வத்தின் பெயரால் பொட்டுக்கட்டுவது ஒழிந்துபோய் விடும். அவர்கள் வியபசாரத்திற்காகவே முத்திரைபோடுவதென்பது தெற்றென உலகோர் அறிய ஏதுவாகும்.

நிற்க, சமீபத்தில் பம்பாய் கவர்ன்மெண்டார் புதிய சட்டங்கள் செய்து முதலில் தலைநகரான பம்பாயில் எக்காரணங்கொண்டும் எவ்விடத்திலும் விபசாரவிடுதிகள் இருக்கக்கூடாதென ஏற்பாடு செய்துள்ளனராம். திருட்டுத்தனமாகச் சில இடங்களில் விபசாரிகளைவைத்து வருவாய்தேடிச் சம்ரக்ஷித்துவந்தவர்களை இரகசியப்போலீசார் மூலமறிந்து தண்டனைக்குட்படுத்தியும் அபராதத்தொகை வசூலித்தும் உள்ளதாகத்தெரிகிறது. இதிலிருந்து இப்பொழுது பம்பாயில் எவ்விடத்திலும் விபசார விடுதிகள் இல்லாமலிருக்கின்றன. இங்கெல்லாம் அதேபோல் சென்னையிலும் சுற்றுக் கிராமங்களிலும் உடனே முயற்சி எடுத்துப் பம்பாயைப்போல் இதற்கெனத் தனியான இரகசியப்போலீஸார்களை நியமித்து எக்காரணங்கொண்டும் எவ்விடத்திலும் விபசார விடுதி

களோ அல்லது விபசாரிகளைத் தனியாகவைத்து ஆதரிக்கும் கூட்டங்களோ இருக்க வழியில்லாமல் செய்யவேண்டியதும் மீறி அதை நடத்துபவர்களுக்குத் தகுந்த தண்டனை விதிக்கவேண்டுவதும் இன்றியமையாத கடமைகளில் ஒன்ருகும். தெய்வத்தின் பெயரைவைத்துக்கொண்டு தேவமாதர்கள் என நாமஞ்சூட்டி விபசாரத்திற்கென்றே மைனர் பெண்களை வளர்த்துக் காலந்தள்ளும் ஆண்களும் பெண்களும் இனி அம்முறையில் நீடித்துக் காலந்தள்ளமுடியாது. இன்று பம்பாயில் நிலவியுள்ள சமீபத்தில் பரோடா, திருவனந்தபுரம், மைசூர் முதலி சமஸ்தானங்களில் நிலவ ஏற்பாடாகியுள்ள சட்டமும் நடைமுறைகளும் இன்றல்லவாயினும் இன்னும் ஒன்றிரெண்டு வருடங்களில் எங்கும் நிலவி இடம்பெற்றுவிடும். அப்பொழுது இதையேஜீவனமாகக் கைக்கொண்டுள்ளவர்கள் பிறகு வருந்த நேரிடுமாகையால் இப்பொழுது முதலே அத்தீய முறையை மாற்றி எத்தொழிலாயினும் ஓர் தொழிற்செய்தே பிழைக்கவேண்டும். மானத்தைவிற்றுப் பிழைக்கும் இது இனி நமக்கு வேண்டாம், என்ற முடிவிற்கு வருதலே நலம். புராதன பழக்கம், தேவாலய ஊழியத்திற்கு இக்கூட்டம் வேண்டுமென எவரும் வாதாடுவார்களாயின் எல்லாஜாதியாரும் ஒவ்வோர் குடிப்பெண்களை அத்தொழிலுக்கு விடலாம். அதனுல் பாதகமில்லை. இனி எக்காரணங்கொண்டும் இதற்கென ஒரு வகுப்பார் ஒதுக்கிவைக்கப்படுதல் வேண்டாத விஷயம். புராதன ஆலயங்களின் பெருமைக்குப் பங்கமான இக்கொடிய செயலை அறவே ஒழித்தும் இதன்னியில் ஆலயத்தின் பெயரைவிடுத்துத் தனித்த முறையில் எங்கேனும் இருந்து விபசாரஞ்செய்ய மாதர்கள் முற்படின் அதையும் ஒழித்துப் இந்திய நாட்டில் பொதுவீதிகளில் விபசார இல்லங்கள் இல்லை எனப் பெயர் உண்டாக யாவரும் வேலைசெய்ய வேண்டுகிறேம்.

நாட்டியத்திற்காகவும் இதர ஆடல் பாடல்களுக்காகவும் ஒருவகுப்புப் பெண்களை ஒதுக்கிவைத்து அவர்களே அதைச் செய்யவேண்டுமென்ற அவசியமில்லை. நாட்டியக் கலைபோன்றவை அபிவிருத்தியை விரும்புவோர் விரும்பும் எல்லா சமூக, அல்லது குடும்பப் பெண்களையும் அத்துறையில் பழக்கி ஏனைய தொழில் போன்று அதையும் ஓர் தொழில் முறையில் நடத்துவதால் யாதொரு தீங்கும் நேரிடாது. அது பொதுவாக எல்லாசமூகத்தவராலும் வளர்க்கப்படுமாயின் நன்ருக விர்த்தியாவதற்கும் இடமுண்டு. அவ்வாறே இவ்வழியை விடுத்து அதை விரும்புவோர் செய்ய முற்படவேண்டுகிறேம்.

அன்பு.

ஸ்ரீராமன் எழுதுவது.

நமக்குரிய கடமைகளிரண்டு. அவை அருட்டிறம் பூண்டு, உலகு புரந்து, உயிர்களுக்கு அழிவில்லாத அந்தமில் இன்பத்தை ஆதரவோடளிக்கும் ஆண்டவனிடத்து அன்பு செலுத்துங் கடமை யொன்று; மற்ருென்று, ஒருவன் தன்பால் அன்பு கூறுமா போலத் தான் பிறர்மாட்டும், பிற ஜீவர்களிடத்தும் அன்பு செலுத்தற்பாலதாய ஒழுக்க முறை. ஆகவே, மக்கட் பிறப்பினர்க்கு உற்ற கடமை அன்பு கூர்தல் என்ற வொன்றில் அடங்கிற்று. கடவுளிடத்துச் செய்யப்படும் அன்பு பக்தி எனப்படும். யான் இங்கு விவரிக்க யெடுத்துக்கொண்டது ஏனையது. அது ஜீவகாருண்யம் எனப்படும். அக்குணம் உயிர்க்கு இன்றியமையாப் பண்பாம். அன்பின்றி உயிர்வாழக்கை யில்லை யென்பார் போல நமது தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

"அன்பகத் தில்லா வுயிர் வாழ்க்கை வன்பார் கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று"
என்று நமக்கு வற்புறுத்திக் கூறுகிருர்.

அன்பு எனப்படுவது யாதெனின், ஆன்மாவில் உண்டாகும் ஓர் உருக்கம் அல்லது நெகிழ்ச்சியாம். நாயனுரும், "அருளென்னு மன்பீனுங் குழவி" என்ருராகலின், அன்பின் பயனுய் விளங்குவது அருள். அன்பு அருள் என்னும் இவ்விரு குணங்களும், உலகில் மனையாளோடிருந்து இல்லறம் நல்லறமாக்குவாரும், உலகப் பற்ருெழித்துத் துறவறம்புரிவாருமாகிய இரு திறத்தார்க்கும் இன்றியமையாதனவாம். அவற்றின் இயல்பாவன. எல்லாவுயிரையும் தன்னுயிரைப்போல நேசித்தலும், பிறவுயிருக்குத் துன்பம் நேர்ந்த காலத்து அதனை நீக்கப் பரிந்து செல்வதும், இரங்குவதும், துன்பம் நீங்கியதைக் கண்டவிடத்து மகிழ்தலும், தன்னை நாடி வந்தாரை முகம் மலர உபசரித்தலும், பிறர்செய்த நன்றியை

மறவா தொழுகலும், பிறர் குறை பொறுத்தலும், அவர் குற்றங் களை யெடுத்துத் தூற்ருமையும், பிறரது கல்வியுயர்வு, செல்வ வளர்ச்சி, மேம்பாடாதிகளைக் கண்டுப் பொருமைப்படாது, உள் ளத்து உவத்தலும், யாவர்க்கும் பயன் றருவனவாகிய இன்சொற் களையே உயர்ந்தோர், ஒத்தோரிடத்துக்கூறி அறம் வளர்த்தலும், பகைவர், அயலார், நட்பினர், என்னும் பேதமின்றி யாவரையும் சமநோக்கிற் கண்டு நடு நிற்றலும், தீய செயல்களைச் செய்யா தொழிதலும், பிறர்க்கு நல்லமாதிரி காட்டலும், நன்னெறிக்கண் அவரை யுய்த்தலும், உலக நடையை அறிந்து தமது கல்வி, செல்வம், பொருள், சரீரம், இவை யாவருடைய உபசரிப்புக்கும் பொதுவாக அமைத்தலும், மனத்தில், வாக்கில், உண்மை நிகழ எக்காலும் பொய்மை ஒழித்தலும் ஆகிய இத்தகைய செயல்களே இன்பத்தின் இயல்களாம்.

ஆகையால், அன்பு எங்கே குடியிருக்கின்றதோ அங்கே எல்லா அறங்களும் கூடியிருக்கக்காணலாம். அன்பினலேயே இப்பிரபஞ்சங் கட்டுண்டிருக்கிறது. அன்பின் கட்டிலேயே உலகி யல் நடந்தேறுகின்றது. அன்பே பரோபகார சிந்தையைத் தரு கின்றது. அன்பே பொது நன்மையைச் செய்விக்கின்றது. அன்பே நீதிச்சட்டங்களை ஏற்படுத்துகின்றது. துன்மார்க்கங்களை யொழிக் கின்றது. அன்பே சமாதானத்தை நிலைநிறுத்துகின்றது. அன்பே எல்லாச் சுதந்தரங்களையும் அளிக்கின்றது. அன்பே உண்மை ஞானங்களை வளர்க்கின்றது. அன்பின் பெருமைகளை நன்காரா யின் அதுவே சகல நன்மைகட்கும் மூலமென நனிவிளங்கும். அன்பு எங்கே தலையெடுக்கின்றதோ அங்கே எல்லா அறங்களும், எல்லா வளங்களும், எல்லாமாட்சிகளும் ஓங்கி வளர்வன. அன்பு செய்தலினலே அன்பில்லாக் கடின சித்தரிடத்தும் அன்பை விளைவித்தல்கூடும். அன்பினலே தீமைகளையும் தீக்குணங்களையும் ஒழித்தல் கூடும். பகைவர்களையும் கோபமுடையோர்களையும் நேசமாக்கும் வன்மையுடையதும் அன்பே யாகும்.

இனி, பிறர்க்கு நாம் செலுத்தவேண்டும் கடமைகளுள் நமது அன்புக்கு முதல் பாத்திரமாவார் நமது தாய் தந்தையர் 'அன்னை யும் பிதாவும் முன்னறி தெய்வம்' இறைவன் ஸ்தானத்திலிருந்து

நம்மை இவ்வுலகத்திற் பெற்று வளர்த்து ஆதரித்தவர்களும் நம்மை அத்தியந்தம் நேசித்தவர்களும், அன்பென்னுங் குணத்தை நமது உள்ளத்தில் முதல் முதல் உருப்பெறச் செய்தவர்களும் அவர்களே. அவர்களிடத்து நமக்குள்ள கடப்பாடு என்று மறக்கற்பாலதன்று. அதனுலே ஔவையார் 'தந்தை தாய்பேண்' என்று நமக்கு உபதேசிக்கிறார். பேணுதலாவது அவர்களை உபசரித்துப் பெருமைப்படுத்துதலும், அவர்களுக்கு வேண்டும் பணிவிடைகளைச் செய்தலும், இடுக்கண் காலத்தும், தளர்ந்த பருவத்தும், ஊன்றுகோல் போல் நின்று உதவுதலும், நமது நல்லொழுக்கத்தால் அவரைக் கனம் பண்ணுதலும் ஆம்.

பெற்றோர்களே! நம் பிள்ளைகளுக்கு அழகைத்தர ஆபரணங்கள் வேண்டப்படுவனவல்ல. அவர்கள் அகத்தின் அழகு அன்பென்னுங் குணத்தால் அமைவது. உங்கள் குழந்தை கட்குப் பாலூட்டும்போதே அன்பின்பெருக்கத்தையும் தேசாபிமான சீலத்தையும் அவர்கள் உள்ளத்தில் முளையரும்பச் செய்யுங்கள். இளமையிலேயே அன்பு என்னும் பயிர்க்குக் களையாகிய துர்க்குணங்களை அவர்களிடத்துக் களையுங்கள். உங்களது ஒழுக்கமும் குணமும், உங்கள்பிள்ளைகளின் ஒழுக்க உயர்வுகட்கு மேல்வரிச் சட்டமும், கருக்குவையுமாவன. அவர்களை நன்னெறிக்கண்செலுத்துவதிலும்கல்வியில் அபிவிர்த்தி செய்வதிலும் உலகத்தோடொத்து வாழும் இயல்பினராக்கலிலும், நுங்கள் மீது சுமந்தபாரம்அதிகம்.

இங்ஙனம் மக்கள் பால் மெய்யன்பும் அருளும் உடையீரேல் அவர்உங்கட்குஇளமையில்பெரும்'பேறு' பெறுதற்குரியவர் ஆவர். அன்றியும்,கண்டோர்'இவன் றந்தை என்னோற்றான் கொல்' என்று சொல்லும்படியான பெரும் புகழையும் உங்களுக்கு இசை விப்பர்.

தாய் தந்தையரைப் பேணு முறைமேய அவரிடமாய் அமைந்துள்ள பெரியோரையும் பேணுதல் நமது கடமையாகும். அவருள் முதல்வராவார் ஞானசிரியர். அவர் தமக்கெனவன்றிப் பிறர்க்கென்வாழும் பெற்றியர். அன்பின் பேலீட்டால் தம்மை மறந்தனராம் தம்மை அடைந்தாரது சுகதுக்கங்களையே தமதாகப் பாவிப்பவர். தம்மவர் ஆன்மலாபம் ஒன்றனையே கருதி, நல்லுபதேசஞ் செய்து தமது செய்கையால், ஏனையோரையும் நல்வழிப்படுத்தலால் அன்னோரை நேசித்தலும், வழிபடலும், அவர் ஏவின வழி நிற்றலும், தொண்டுபுரிதலும், அவர்க்கு ஊண், உடை, மருந்து அளித்து ஆதரித்தலும் நமக்குக் கடனும். அவ்வாறே நமது போதகாசிரியர் அல்லது உபாத்தியாயர்கள் மாட்டும் அன்பினுல் நாம் பிணிக்கப்படுகின்றோம். நமது அறிவு வளர்ச்சிக்கும், சன்மார்க்க

எழுச்சிக்கும் இன்னும் அரசாங்கத்தாரிடத்தும், எஜமானர்களிடத்தும்அன்புகூர்தல்யாவர்க்கும் ஏற்பட்ட கடமையாகும். முன்னையோர் நமது அன்ன தாதாக்களாகிய உபகாரிகள். அரசாங்கத்தாரிடத்து நாம் அன்பு பாராட்டல் யாங்ஙனமெனில், அரசியல் குடிகளின் காவலின் பொருட்டாதலாம். நீதி பரிபாலனத்துக்கென யேற்பட்ட ஆணை நெறி நின்று ஒற்றுமையையும் தருமத்தையும் உடன் பரிபாலித்து, காப்புத் தொழில் இடையூறின்றி நடத்துதற்காக ஏற்பட்டுள்ள வரிகளை முறையே இறுத்துத் தேசக்ஷேமத்தைக் காத்து வருதலாகிய கடமையைக் கைக்கொண்டு ஒழுகுதலாம். அரசாங்கத்தாரும் குடிகளின் நகர பரிபாலனத்தைக் கருதி அவர்மாட்டு அன்பு கூர்வர் ஆதல் வேண்டும். அரசாட்சியின் ஒவ்வொரு பகுதித் தொழிலாளரும் தங்கள் நன்மைக்காக வன்றிக் குடிகள் நன்மைக் கேற்பட்டவர்களா தலையுணர்ந்து, ஜனங்களை வாதிப்பவராயிராமல் ஆதரிப்பவராய் இருக்கவேண்டும். வேலைக்காரரும் ஊழியரும் தம் எஜமானரிடத்து அன்புகூர்ந்து தமக்கிட்ட பணியை இகழாது செய்து எஜமானரை சந்தோஷப்படுத்தக் கடவர். எஜமானர் தங்கள் ஊழியர்பால் அன்புடையராய் அவர்களது அசட்டையால் குற்றம் நேரிட்டால் தண்டித்தல் அன்றி அவர் தெரியாமற் செய்த குற்றங்களிற் பராமுகமுடையராய், அவர்க்குரிய கூலியைக் குறைக்காதிருக்கக் கடவர்.

மெய்யான அன்பு செய்கையிலே விளங்குவது. பெரியாரிடத்து அன்பு எங்ஙனம் விளங்கிற்று என்று காண்மின். பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் கழித்துவந்து நாடுகேட்டும் கொடாது, போர்புரிந்து பெருக என்று தாயகத்தார் கூற, தருமன் பிறவுயிர்கட்கு இடுக்கண் விளைத்து நாட்டைப் பெற்று அரசு புரிவதினும், ராசபோக மிழந்து காட்டில் வசித்து காய், கனிகளைத் தின்று நாட் கழிப்பது நலமென்று அவன் மனத்தை வலியுறுத்தியது அன்பன்றி மற்றுயாது? போரின் கடை நாள் துரியோதனன் தனக்குள்ளன வெல்லாம் இழந்து தனி யுத்தத்திற்கு வீமனோடு இசைந்து குறித்தவிடம் நோக்கிச் செல்லுங்கால், யுதிஷ்டிரன் அவனை யணுகி, தம்பி இதுவரை நடந்தபோர் போதும். உயிர் மாய்தல் வேண்டா. அரசாட்சியை நடத்த மனம் ஒவ்வுக. யாங்கள் உன் கீழ் அடங்கி வாழ்வம் என்றனன். என்னே அன்பின் சீரிய தன்மை. மற்றும் "அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு" என்ற இலக்கியத்திற்கு இலக்கியரான ததீசி முனிவர் வரலாற்றையும் நோக்குக. அன்பிற்கு இதனினும் யாது சான்று வேண்டும்? விரிக்கிற் பெருகும்.

———

கோவில்களில் தேவதாசிகள்.

ஸ்ரீமதி. முத்துலக்ஷுமியம்மாள் அவர்கள்.

"குடியை ஒழிக்க முன் வந்திருக்கும், ஸ்ரீஜத் ஸி. ராஜ கோபாலாச்சாரியார், சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், மைலாப்பூர் கபிலேஸ்வரர் கோவில் ஆகிய இவ்விரண்டு கோவில் தர்மகர்த்தாக்களைக் கோவிலுக்குச் சொந்தமான தென்னை மரங்களிலிருந்து கள்ளிறக்குவதற்கு மரங்களைக் குத்த கைக்கு விடக்கூடாதென்று கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான். ஆச்சாரியார் இவ்வாறு செய்வதானது குடியை ஒழிப்பதற்கும் ஏதுவாக இருப்பதோடு, இந்தியரின் விடுதலைக்கும் ஓர் கருவியாக அமையும் என்பதை முன்னிட்டு நான் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த இரண்டு கோவில்கள் மட்டுமல்ல, ஏகாம்பரேஸ்வரர், கந்தசாமி கோவில்களிலும் இன்னும் எத்தனையோ கோவில்களிலும் இருந்துவரும் மற்றொரு கொடிய பழக்கத்தையும் நான் நமது தலைவர்களுக்கு ஞாபகமூட்டவேண்டியிருக்கிறது. ஏற்கன்வே இருந்துவரும் தேவதாசிகள் இன்னும் கோவில்களில் இருந்துவருவதோடு, புதிது புதிதாக அநேக வாலிபப் பெண்களும், கோவில் அதிகாரிகள் குருக்கள்மார்கள் முதலியோருடைய முழு அனுமதியோடு, கோவிலுக்கு அர்ப்பணம் செய்யப்படுகிறார்கள். இதைக் கண்ட மற்றச் சிறிய கோவில்களும் இவ்வழக்கத்தையே அனுசரித்து வருகின்றன.

கோவிலுக்குச் சொந்தமான தென்னை மரத்திலிருந்து கள் இறக்கும்படி அனுமதி கொடுப்பது எவ்வளவு பாவமும் அநியாயமுமான செயலோ, அவ்வளவு பாவமும் அநியாயமும் ஒரு பெண்ணைக் கடவுளின் பேரால் விபசாரியாக்குவதிலும் உண்டல்லவா? நாகரீக முள்ளவர்களும் கலாசாலைப் பட்டதாரிகளும் மிகுந்து விளங்கும் சென்னையில் கூட இவ்வாறு நடைபெறுவது எவ்வளவு மானக்கேடான விஷயம் என்பதை நம்மவர் சிந்தித்துப்

பார்க்க வேண்டும். தென்னிந்தியாவிலுள்ள கீர்த்திவாய்ந்த காஞ்சிவரம், திருக்கழுக்குன்றம், மதுரை, கும்பகோணம், தஞ்சாவூர் முதலிய இடங்களிலுள்ள கோவில்களில் விபசாரத்துக்கென்றே, சிலர் குழந்தைகளைப் பால்ய முதலாகப் பழக்கி வருகிறார்கள் என்பது நாமெல்லோரும் அனுதினமும் கண்டுவரும் காக்ஷியாகும். 18 வயதுக்குட்பட்ட பெண் பேதைகளைக் கோவிலுக்கு அர்ப்பணம் செய்வது கூடாதென்று சட்டமியற்றப்பட்டிருந்தும், கோவில் அதிகாரிகள் தாராளமாக இவ்வழக்கத்தை ஊக்கப்படுத்தி வருகிறார்கள். ஜன சமூகமும் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறது. மேற்படி கோவில்களில் உற்சவங்களின்போது, சங்கீதம் நாட்டியம் முதலியவைகளில் தேர்ச்சிபெற்ற இளம் பெண்களில் பலர் தங்களை ஆடையாபரணங்களால் அலங்கரித்து ஊர்வலம் வருவதைப் பார்க்க நூற்றுக்கணக்கான, ஏன்? ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒருவரை யொருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு ஆவலுடன் பார்ப்பதை நாம் இப்போதும் காண்கிறோம்.

கோவில்களில் நடக்கும் இந்தத் துர்ப்பழக்கத்தை நிறுத்த வேண்டுமென்று அநேக பொதுக்கூட்டங்களும் மகாநாடுகளுங் கூடி ஜன சமூகத்திற்கு அடிக்கடி சொல்லிக்கொண்டே வந்தன. இக்கொடிய பழக்கத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்று தம்மால் கூடியமட்டும் மகாத்மா காந்திஜீயும் தென்னாட்டில் நிலவிய காலத்தில் சொல்லியிருக்கிறார். மேலும் தர்மச் சொத்து மசோதாச் சட்டத்திலும், தேவதாசிகளுக் கென்று மானியம் விடப்பட்டிருக்கும் நிலங்களினின்றும் அவர்களை விடுதலை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆந்திர தேசத்திலும் தமிழ்நாட்டிலுமுள்ள கோவில் தர்ம கர்த்தாக்கள், தங்களை விடுதலை செய்யும்படி கேட்டுவந்த தாசிகளின் மனுக்களை நிராகரித்து விட்டதாகத் தெரிகிறது. குடியால் ஏற்படும் தீமைகளை விட, விபசாரத்தால் ஏற்படும் தீமைகள் அதிகமாகு மென்பதை நமது தலைவர்களில் சிலர் நீங்கலாகப் பலர் அறிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். பொதுவாக விபசாரம் என்பது நாகரீகம் மிகுந்த நாடுகளிலும் கூட நடந்துவருகிறதென்பது உண்மையே. ஆனால் விபசாரத்தை ஒரு தொழிலாகக் கைக்கொள்ளும்படி எந்த சமூகமும் ஒப்புக்

கொள்ளாது. பிறரறியாவண்ணம் கள்ளத்தனமாகக் கூட்டுறவு செய்ததின் பயனால் பிறந்த பெண்களாயிருப்பினும், அப்பெண் களையும் கூட விபசாரத் தொழிலுக்கே அர்ப்பணம் செய்யும்படி எந்த நாகரீகமுள்ள சமுதாயமும் சொல்ல முன் வராது. அதிலும் இக்கொடிய பழக்கத்தை ஆலய வழிபாட்டின் பெயராலும், மதத் தின் பெயராலும், அனுமதித்து வரும் சமுதாயம் உலகத்தில் வேறு எங்கும் இல்லை யென்றே கூறலாம்.

இதுவரை கோவில்களுக்கென்று அர்ப்பணம் செய்யப்பட்ட மாதர்களின் வருங்கால வாழ்க்கை என்ன? தேவதாசிகளில் அதிர்ஷ்டமுள்ள ஒரு சிலர் செல்வாக்கும் செல்வமும் உள்ள தனவந்தர்களால் காப்பாற்றப்படுகின்றனர். மற்றவர்களெல்லோ ரும் விபசாரம் என்னும் படுகுழியில் விழுந்து பலவிதமான தொத்து வியாதிகளுக்கு இருப்பிடமாய்த் தங்களிடம் கூட்டுற விற்கு வரும் ஆண்மக்களுக்கும் தங்கள் நோயைப் பகிர்ந்து கொடு க்கும் ஜீவகாருண்ய சொரூபிகளாய்த் திகழ்கிறார்கள். முன் சொல் லிய தேவதாசிகளின் வருப்பார் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகிறார்கள். அதாவது அவர்கள் சமுதாயத்தில் ஒன்றுபட்டு விட்டார்கள்.

ஆகையால் நம்மிடையே இருந்துவருகிற இக்கொடிய பழக் கத்தை ஒழிக்க முன் வருவார்களாக.

வீண் செலவு.

ஏழை இந்திய மக்களின் தலையில் வரிப்பளுவைச் சுமத்தி வசூலிக்கும் பணத்தை அரசாங்கத்தார் எப்படிச் செலவு செய் கின்றனர் என்பதைப் பாருங்கள்.

	கோடி
இராணுவ இலாகாச் செலவு	55
மற்ற சிவில் இலாக்காக்களில் உத்தியோகஸ்தர் சம்பளம்——படி முதலியவை	70
கட்டிடங்கள்	16
சர்க்காரால் வாங்கப்பட்ட கடன்களுக்கு வட்டி	20

ஜனங்களின் நன்மைக்கான துறைகளில் செலவு செய்யும் தொகை மிகவும் சொற்பம். வீண்செலவுதான் அதிகம். —ச. ரா.

திருப்பத்தூர்

தாலுகாக் காங்கிரஸ் சபை.

திருப்பத்தூரில் கூட்டம்.

20—9—31-௨ மாலை 6-மணிக்கு திருப்பத்தூர் கருப்பர் கோவில் மண்டபத்தில் திருவாளர் ப. ஜீவானந்தன் அவர்கள் தலைமையில் கூடிச் செய்யப்பட்ட தீர்மானங்களாவன:—

1. சென்ற கூட்டத் தீர்மானங்கள் படிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டன.

2. பிரஜோற்பத்தி-௟ ஆவணி-ீ 31-௨ வரையுள்ள கணக்குகள் பார்க்கப்பட்டு 72—3—9 ரூபாயுள்ள இருப்புடன் கூடிய கணக்கை ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. தாலுகா அங்கத்தினர்கள் சம்மந்தப்பட்டவரை சந்தாத் தொகை சிலர் செலுத்தாதிருப்பதை இன்னும் 15 தினங்களுக்குள் அவசியம் செலுத்திவிடும்படி இக்கூட்டம் சந்தா செலுத்தாத அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. நமது தாலுகா கமிட்டியில் ஒரு அங்கத்தினரான புதுவயல் திருவாளர் நல்லையா ஜோதிஷர் அவர்கள் சாதாரண அங்கத்தினராயுமில்லாமல் நிரந்தரமாகக் கதருங் கட்டாமல் இருப்பதாலும் காங்கிரஸ் கூட்டங்களில் கலந்துகொள்ளாமலுமிருப்பதாலும் அவரை அப்பதவியிலிருந்து வருத்தத்தோடு விலக்கிக் காலியாகவுள்ள அந்த ஸ்தானத்திற்கு கோட்டையூர் ஸ்ரீமதி. காவேரி அம்மாள் அவர்களை நியமிப்பதாக இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

5. திருப்பத்தூர் கள்ளுக்கடை ஏல மறியல் சம்மந்தமாக ஜில்லாக் கமிட்டியார் இக்கமிட்டியின் சம்மதி யன்னியில் செலவு செய்து நமது பேரில் பற்றெழுதியுள்ள ரூபாய் பத்தே கால் நமது கமிட்டியைவிட ஜில்லாக் கமிட்டியார் செல செய்து அவ்

வேலையைச் செய்வதற்குப் போதிய பணம் வைத்துள்ளபடியா லும் நம்மைப்போன்றே அவ்வேலையைச் செய்ய அவர்களுங் கடமைப்பட்டுள்ளபடியாலும் ஷெ செலவை அவர்களே ஏற்றுக் கொள்ளும்படி இக்கூட்டம் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

6. சுல்தான் பக்தாதி அவர்கள் தாலுகாக் கமிட்டி சம்மந்த மாக ஆக்ஷேபித்தெழுதியுள்ள கடிதமும் ஜில்லாக்கமிட்டிசம்மந்த மான கடிதமும் படிக்கப்பட்டு அதுசம்மந்தமாக விசாரிக்க நியமிக் கப்பட்டுள்ள திருவாளர் பக்தவத்ஸலம் அவர்களுக்கு எல்லா ரிக்கார்டுகளையும் காண்பித்து நியாயமான முடிவை அவர்களிட மிருந்து பெறும் அதிகாரத்தைக் காரியதரிசிக்கு இக்கூட்டம் அளிக்கிறது.

7. ஜில்லாக் கமிட்டியாருக்கு உதவிவேண்டிக் காரியதரிசி யால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு அவர்கள் ஐம்பது ரூபாய் உதவி செய்துள்ளதற்கு இக்கூட்டம் ஜில்லாக் கமிட்டிக்கு நன்றி செலுத்துகிறது.

8. பள்ளத்தூரில் திருவாளர் எஸ். என். நாயர் அவர்கள் கள்ளுக்கடை மறியல் நடத்துவதில் காங்கிரஸின் பெயரை உப யோகித்துக்கொண்டு பலாத்காரமாக நடந்துகொள்வதையும் பொதுஜனங்களின் சம்மதியில்லாமல் நடந்துகொள்வதையும் கண்டிப்பதோடு அம்மறியலுக்கும் காங்கிரஸிற்கும் யாதொரு சம்மந்தமுமில்லை என்பதைப் பொதுஜனங்களுக்கு இக்கூட்டம் அறிவித்துக்கொள்வதோடு அதை துண்டுப்பிரசுர மூலம் பொது ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டியது என இக்கூட்டம் தீர்மா னிக்கிறது.

9. ஒவ்வோர் கிராமக் கமிட்டிக்காரர்களும் தங்கள் தங்கள் ரிப்போர்ட்டுகளை அனுப்புவதிலும் தங்கள் தங்கள் சபைகளைப் பதிவுசெய்து கொள்ளுவதிலும் தாலுகா கமிட்டி யுடன் ஒத்துழைத்தால் தான் தாலுகா கமிட்டி வேலைகள் செவ்வையாக நடைபெற முடியுமாகையால் ஒவ்வோர் கிராம சபையாரும் ரிப்போர்ட்டுகளை அனுப்பியும் சபைகளைப் பதிவு செய்தும் ஒத்துழைக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளு கிறது.

10. அக்டோபர் இரண்டாந்தேதி முதல் ஒருவாரத்தை மஹாத்மா காந்தி ஜயந்தியாக ஒவ்வோர் கிராமத்தாருங் கொண்டாட வேண்டுவதுடன் அத்தினங்களில் கதர் பிரசாரமும் குடிவிலக்குப் பிரசாரமும் தீவிரமாகச்செய்யும்படியும்தேசிய நிதிக்குப் பணந்திரட்டும்படியும் ஒவ்வோர்கிராமக் கமிட்டியையும் பொது ஜனங்களையும் இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

11. இத் தாலுகாக் கமிட்டிக்குத் திருப்பத்தூர் தாலுகா கமிட்டி எனப் பெயர் இருப்பதை மாற்றிப் பள்ளத்தூர் தாலுகா கமிட்டி என்று பெயர்வைக்கும்படியும் அதன் எல்லையை ரெவினியூ திருப்பத்தூர் தாலுகாவின் எல்லையாகவே இருக்கச் செய்யும்படியும் முடிவுசெய்யும்படி ஜில்லா, மாகாண, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிகள் தீர்மானஞ் செய்யவேணுமாய் இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

திருப்பத்தூர் தாலுகா காங்கிரஸ் கமிட்டி.

பிரஜோற்பத்தி ஆவணி 31-உ வரை வரவு செலவு.

	ரூபாய். அ. பை.
சந்தா வரவு	188-14-0
கமிட்டி அங்கத்தினர் சந்தா வரவு	15—0—0
மாகாண கமிட்டி பகுதி வரவு (செல்லாகவேண்டியது)	7—6—0
ஆத்தங்குடி கிராமகாங்கிரஸ் சபா	15—0-0
ஆக வரவு ரூபாய்	226—4—0.

	ரூபாய் அ. பை.
சிலவு அச்சுக்கூலி	16—0—0
சிலவு பிரயாணம்	3—0—0
சிலவு ஸ்டாம்பு	2—4—0
சிலவு சில்லரை	1—10-3
சந்தாப்பகுதி ஜில்லா, மாகாணம்	95-12-0
ராம. பற்று	2—12-0
ஜில்லாக்கமிட்டி பற்று	10—4-0
சங்கரன் பற்று (தொண்டர்)	8—12-0
சாமான் கொள்முதல் பற்று	13-10-0
இருப்பு ரூபாய்	72—3—9.
ஆக பற்று ரூபாய்	226—4—0.

மணியொளி.

லண்டனில் மஹாத்மா.

மஹாத்மாஜீ லண்டன் சென்றுவிட்டார்கள். அங்குமஹாத்மா சென்றால்என்னநிகழுமோஎனஅஞ்சியஇந்தியர்மனம் வெட்குறும் படியானஅவ்வளவுஉயரிய கௌரவமும் பக்தியும் கொண்ட மனப் பான்மை பிரிட்டிஷ் பொதுஜனங்களால் மஹாத்மாவிற்கு அளிக் கப்படுகிறது. அன்புமயமான ஆத்மா தங்கிய உரு மஹாத்மாஜீயின் உருவாகையால் எதிரிகள் யாவரும் தன்னையறியாமலேயே உற்சாக மான வரவேற்பளித்திருக்கின்றனர். லண்டனிலும் லங்காஷயர் முதலிய இடங்களிலும் மஹாத்மாஜீ சென்று முக்கியஸ்தர்களை யெல்லாம் கண்டு இந்திய விஷயம் பற்றிப் பேசி அவர்களின் ஐயங்களை எல்லாம் போக்கி இந்தியாவின் உண்மைநிலையுணர எவ்வளவு தூரம் சாத்தியமோ அவ்வளவையும் மஹாத்மாஜீ செய்துவருகின்றார்கள். அந்நாட்டுப் பெரியார் பலரும் மஹாத்மா வை வரவேற்பதை தங்கள் வாழ்நாளில் கண்ட ஓர் பெரும் பாக்கியமாகவே கருதி மனமுவந்த வரவேற் பளிக்கின்றனர். சுருங்கக் கூறின் உலகின் எப்பகுதியிலிருந்து லண்டன் சென்றார் க்கும் அன்புமயமான மனமுவந்த இவ்வளவு பெரும் வரவேற்பும் பொதுஜன உற்சாகமும் இதுவரை இருந்திராது. அரசாங்கத் தாரும் எவ்வளவுதூரம் அவருடைய சௌகர்யங்களைக் கவனிக்க முடியுமே அவ்வளவையுங் கவனிக்கவேண்டிய ஏற்பாடு செய் துள்ளனர். ஓர் ராணுவ மோட்டார் அவரின் வசதிக்காக உதவி யுள்ளனராம். விசேஷ போலீஸ் பாதுகாப்புகள் ஆங்காங்கு செய்து கொடுத்துள்ளனர். இன்னும் எல்லா சௌகர்யங்களையுஞ்செய்து கொடுத்துள்ளனராம். நாம் முன் எதிர்பார்த்தபடியே வட்டமேஜை மஹாநாட்டினால் ஓர் பலனும் கிடைக்காது போயினும் மஹாத்மா வின் லண்டன் விஜயத்தில் லண்டன் மஹாஜனங்களின் மனதைத் திருப்திப்படுத்தவும் இந்திய நிலைமையை லண்டன் வாசிகள் நன் கறியவும் பெரும் உதவியாக விருக்கும் என்பது நிச்சயமே!

வட்டமேஜையில் மஹாத்மா.

லண்டனில் மஹாத்மா செல்லவேண்டி நேர்ந்த வட்டமேஜை மஹாநாட்டில் மஹாத்மாஜீ கலந்துகொண்டுவிட்டார்கள். அங்கு வட்டமேஜையில் மஹாத்மாஜீ வானிற் சந்திரன் போன்று பிரகாசிக்கின்றார். சென்றதும் முதலிலேயே நமது அரியகாலத்தை வீணுக்க நாம் வரவில்லை; அல்லது சுகபோக மனுபவிக்க இங்கு வரவில்லை. வீணுக ஓய்வுகொள்ளாமலும் நாட்கடத்தாமலும் சுறுசுறுப்பாகக் கலந்துவேலையைக் கவனித்து முடிவுசெய்வதிலேயே கண்ணுங் கருத்துஞ் செலுத்தவேண்டு மென்று மஹாத்மாஜீ யாவருக்கும் கூறியிருப்பதோடு முதலிலேயே வட்டமேஜையின் வேலை என்ன? இந்தியாவிற்கு எவ்வளவு தூரம் சுதந்தரங்கொடுக்க அது முடிவுசெய்யத் தகுதியுடையது என்பதைப் பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்துவிட வேண்டுமெனக் கேட்டுவிட்டார். அதன் முடிவு தெரிந்தால் தானே அதற்குத் தகுந்தபடி என்னென்ன அமைப்புகள், திட்டங்கள் செய்யமுடியுமோ அவைகளைச் செய்யலாம். எனவே, வீணுக நாமும் கூடிப் பேசினேம். தீர்மானங்கள் செய்தோம். அவர்கள் அதை ஒப்பவில்லை என்றில்லாமல் அவர்களின் முடிவை யறிந்து நாம் காரியங்களை மேல்நடத்துவதே தகுதியென எண்ணியே அவ்வாறு சொல்லிவிட்டார்.

சமூகப் பிணக்கு.

வட்டமேஜை மஹாநாட்டிற்குச் சென்றுள்ள ஹிந்துமுஸ்லீம் சமூகத்தவர் மத்தியில் உள்ள பிணக்கைத் தீர்த்து ஒற்றுமை ஏற்படும்படி செய்வதில் மஹாத்மாஜீயவர்களுங் கலந்துகொண்டு மீண்டும் பிரயாசைப்பட்டார்கள். இதர இந்தியத் தலைவர்களும் மாஜி வைசிராய் இர்வின் பிரபுவுங்கூடக் கலந்துகொண்டதாகத் தெரிகிறது. மஹாத்மாஜீயவர்கள் எத்தனையோ வகையில் தன்னால் இயன்றமட்டும் விட்டுக்கொடுத்தும் அது ஓர் முடிவிற்கும் வாராததால் இனி இது பற்றிய பேச்சை லண்டனில் நடத்துவதால் ஒரு பலனும் கிட்டாதென்ற முடிவிற்கு வந்துவிட்டாகத் தெரிகிறது. இப்பிளவிற்கு பிரிட்டிஷாரே காரணமென்றும் அவர்

கள் இந்தியர்களின் இப்பொழுதைய தேவையைப் பூர்த்திசெய்து விட்டால் அப்பிணக்குகள் இந்தியாவில் தானே ஒழிந்துவிடு மென்றும் மஹாத்மாஜீ உள்ளிட்ட இந்தியத் தலைவர்கள் அபிப் பிராயப்படுகிறார்கள். இப்பொழுதும் இவ்வளவு பெரும் முயற்சி யில் இப்பிணக்குத் தீரவழி யில்லாமல்போனது இந்தியாவின் துரதிர்ஷ்டவசமேயாகும்.

வர்த்தகசங்கப் பிரதிநிதி.

வட்டமேஜை மஹாநாட்டிற்கு இந்திய வர்த்தக சங்கச் சார்பில் மூன்று பிரதிநிதிகள் அமர இடந்தருவதாக இர்வின் பிரபு வாக்களித்திருந்தாராம். அதற்கு விரோதமாக புதிய வைசி ராய் பிரபு ஸர். புருஷோத்தம தாஸை மட்டில் நியமித்திருந்தா ராம். அதை ஏற்றுச் செல்ல ஸர். தாஸ் மறுத்துவிட்டார். எனவே மீண்டும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் யோஜனைசெய்து அவருடன் திரு. ஜி. டி. பிர்லா, திரு. ஜமால் முகம்மது சாஹிப் ஆகிய இருவர்களையும் நியமித்து இம் மூவரையும் அழைத்திருக்கி றார்களெனத் தெரிகிறது. இதில் புது மாறுதல் செய்த சர்க்கா ரார் தேசீய முஸ்லீம்களுக்கும் ஓர் ஸ்தானங் கொடுத்திருந்தால் பெரிதும் போற்றுதற்குரியதாக விருந்திருக்கும். அவர்கள் அவ் வாறு செய்யத் தவறிவிட்டார்களாயினும் வர்த்தகர் சங்கவிஷயத்தி லேனும் தாராள மனப்பான்மை கொண்டதைப் பாராட்டுகிறோம்.

அச்சுச்சட்டம்.

இந்நாட்டில் பெரும்பாலோர் கண்டனத்திற்கேதுவாகியும் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் சர்க்கார் மிகப் பிடிவாதமாகப் புதிய அச்சுச்சட்டத்தை தனிக் கமிட்டியில் செய்த சில திருத் தங்களை ஒப்புக்கொண்டதுடன் நிறைவேற்றிவிட்டனர். இத் திருத்தங்கள் அச்சட்டத்தின் வலுவைக் குறைத்துவிட்டதாகச் சிலர் எண்ணியபோதிலும் உண்மையில் இச்சட்டம் அச்சுக்கூடங் களுடையதும் பத்திரிகைகளினுடையதுமான மிகச் சிறிய சுதந் தரங்களையும் பறிப்பதாக விருக்கிறது. அதுவுமல்லாமல் இந்தியா சுதந்தரமடையப்போகிறது. அது பிரிட்டிஷாரின் தயவால் சமரச மாகக் கிடைக்கப்போகிறதென எலோரும் கனவு கண்டு கொண்

டிருக்கும் இச்சமயம் அதுபற்றி, லண்டன் இந்தியத் தலைவர்களும் சர்க்காரும் பேசிக்கொண்டிருக்கும் இச்சமயம், இர்வின் காந்தி ஒப்பந்தம் ஸாஸ்வதமாக இருக்கவேண்டுமென்ற பேச்சு அமுலி லிருக்கும் இப்பொழுது இச்சட்டம் செய்துள்ளது பெரிதும் பொருப்பற்றதாகும். எவ்வளவோ கண்டனங்களிருந்தும் அவர்கள் அதை நிறைவேற்றிவிட்டார்கள். பத்திரிகைகளில் இனி அற்பக் குற்றங்களிருப்பினும் பத்திரிகை நடத்துவோர் பெருங் கஷ்டத் திற் காளாக நேரிடும்.

வரிகள் உயர்வு.

இந்தியச் சட்டசபையில் சர்க்கார் நிதி மெம்பரால் கொண்டு வந்து பெரும் ஆதரவுபெற்றுள்ள அவசர வரவு செலவுத்திட்ட மசோதா இந்தியாவைப் பெருங் கவலையுள் ஆழ்த்திவிட்டதென லாம். இப்பொழுதிருக்கும் வரிகளே மிகுதியெனப் பலவிடங்களி லுங் கூக்குரல் எழுந்துகொண்டிருக்கும் இச்சமயம் சர்க்காரின் வரவுக்கு மிச்சிய செலவை ஈடுசெய்வதற்கு எத்தனையோ அதிகச் செலவுகள் நடப்பதிலிருந்து குறைப்பதன் மூலம் ஈடுசெய்வதை விடுத்து முன்னிருந்தவைகளைவிட சில திட்டங்களில் வரிகளை உயர்த்துவதன் மூலம் அவ்வரவுசெலவை நேர்செய்துகொள்ள சர்க்கார் முற்பட்டதானது பெரும் ஆச்சரியமான விஷயமாக விருக்கிறது. வரவுக்குமிஞ்சிய செலவேற்படாமல் பார்க்கவேண் டும். ஏற்படின் வீணான அதிகச் செலவுகளைக் கண்டு குறைத்து சிக்கனஞ்செய்து அதை ஈடுசெலுத்த வேண்டுமே யொழிய அதிகச் செலவினங்களை உற்பத்திசெய்துகொண்டேபோய் வரியை உயர்த்துவதென்றால் அது எல்லைகடந்துவிடும். வரி உயர்வு செய்வ தால் இந்தியமக்கள் இப்பொழுது அனுபவிக்கும் பணக்கஷ்ட மானது அதை மிகுதியும் அவர்கள் மனத்தில் சஞ்சலமுற வழிதேடுவிக்கும். இவ்விஷயங்களில் அரசாங்கத்தாரின் மனப் போக்குக் கொஞ்சம் மாறுதலடையுமாயின் நலமாகவிருக்கும்.

போற்றுகிறோம்.

சிக்கனவிஷயம் வந்தகாலத்தில் இந்திய வைசிராய் பிரபு

100-க்கு 20-வீதமும் நிர்வாக உறுப்பினர்கள். 100-க்கு 15-வீதமும் தங்கள் சம்பளங்களை குறைத்துக்கொள்ள சம்மதித்தது கண்டு போற்றுகிறோமாயினும் இவ்வாறே பெரும் பதவியிலுள்ளவர்கள் தங்கள் சம்பளங்களை மிகுதியும் வலிய முன்வந்து குறைத்துக்கொள்வதன் மூலந்தான் நாட்டிற்கு நன்மைசெய்ய முடியும். இப்பொழுது அவர்கள் குறைத்துக்கொண்டதற்காகப் போற்றுதல் செய்கிறோமாயினும் உண்மையில் வெளிநாடுகளில் உள்ள பெரும் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களையும் இவர்கள் நிலைமையையும் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழு இது குறைத்துக் கொண்டதாக ஆகமாட்டாது. எனவே ஒவ்வோர் அதிகச் சம்பளம் பெறுவோரும் தகுதியான முறையில் தங்கள் சம்பளங்களைக் குறைத்து ஏழைகளைப் பாதிக்கும் சில்லரை வரிகள் உயர்வதைத் தடுப்பார்களேயானல் அது பெரிதும் போற்றுதற்குரிய உதவியாகும்.

மஹாத்மாகாந்தி ஜயந்தி.

பொதுவாக உலகிற் பலபாகங்களிலுஞ் சிறப்பாக இந்தியாவெங்கும் மஹாத்மாகாந்தி ஜயந்தி அக்டோபர் 2-உ முதல் 8-உ வரை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அதில் ஒவ்வோர் கிராமத்தாரும் மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு அவ்வொருவாரமும் காந்தியடிகளின் கருணைமொழிகளைப் பிறரால் உபதேசிக்கக் கேட்டும் கதரை ஆதரித்தும் ஏழைகளுக்கு அன்னமிட்டும் தேசியபஜனை செய்தும் மஹாத்மாஜீயின் உருவத்தை ரதத்திலும் புஷ்பவிமானத்திலும் ஆனையின் பேரிலும் அலங்கரித்த மோட்டார்கார்களின் பேரிலும் வைத்து ஊர்கோலம் நடத்தியும் அளவில்லா ஆனந்தத்துடன் கொண்டாடியதாகப் பல பாகங்களிலிருந்துஞ் செய்திகள் கிடைத்துள்ளன. அப்பெரியாரின் ஜயந்தி மங்களகரமாக நடந்தது கண்டு சந்தோஷிக்கிறோம். அதற்கறிகுறியாக அவரின் உபதேசங்களின்படி யாவரும் செயல் செய்யுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

விகடத் துணுக்குகள்.

கோயில் பியூன்:— (சட்டை யணிந்து உள்ளேநின்று கொண்டு) சட்டைபோட்டவர்கள் உள்ளே வரக்கூடாதென்று தள்ளிக்கொண்டிருந்தான்.

குரும்பன்:— அடே மடையா! நீ சட்டைபோட்டுக்கொண் டிருக்கவில்லையா? உன்னைமட்டும் சுவாமி அனுமதிக்கிறதாக்கும் என்று முணுமுணுத்துக்கொண்டே அவனைத் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்துவிட்டான்.

ஃ ஃ ஃ

ஒருவன்:— செட்டியாரே! உங்கள் வீட்டில் எனது ப்ராம் மணரல்லாத நன்பரொருவருண்டே அவரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளக்கூடாதா? அவர் கெட்டிக்காரராச்சே!

செட்டியார்:— கோபம்வந்தால் நான்கொடுக்கும் திருப் பாட்டுக்களை வாங்கிக்கொண்டு வேலைபார்க்க பிராம்மணர்தான் லாயக்குள்ளவர்களே யொழிய வேறு யாரும் லாயக்கில்லாததால்!

ஃ ஃ ஃ

குமாரசாமி:— ஒய் பஞ்சாங்கக்காரரே! நமது கந்தசாமியின் உடற்பிறந்தாள் மகளை எனக்கு மணம் செய்விப்பதாக உறுதி கூறிப் பரிசப்பணமும் வாங்கிக்கொண்டான். கலியாணத்திற்கு நாள் பாரும்.

நடேசய்யர்:— அடே பயித்தியமே! கந்தசாமி இம்மாதிரி ஏமாற்றியவர்களில் நீ ஏழாவது பேர்வழி. அவன் பெண்ணு தரு வான்? உன்மனத்திற்குப் புண்தான் தருவான்.

ஃ ஃ ஃ

ஒருவர்:— ஒய் பிரசங்கியாரே! நீர் சொல்லுகிறபடி நடப்ப தில்லையென உங்கள் ஊரில் பேசிக்கொள்ளுகிறார்களே அது ஏன்?

பிரசங்கியார்:— நான் சொல்லுகிறபடி நடந்தால் வருமானம் வராதே என்னசெய்கிற தென்றுதான்?

ஃ ஃ ஃ

கந்தன்:— விகடரே! எத்தனையோ வகையில் கஷ்டப்பட்டு அரசாங்கத்தாரின் விரோதத்திற்குப் பாத்திரமாகி அறிவை பிற

ருக்கு எடுத்துரைக்கும் பத்திரிகாசிரியர்கள் அனுப்பும் பத்திரிகைகளை வருடந்தோறும் படித்துவிட்டு வி. பி. செல்லும்பொழுது திருப்பிவிடுகிறார்களே ஏன்?

விகடர்:— நன்றி ஒருவருக்குச் செய்தால் அதற்குப் பிரதிப்பிரயோஜனம் கிடைக்குமென எதிர்பார்க்கக்கூடாதென முதியோர்கள் சொல்லியிருப்பதை மீறிப் பத்திராதிபர்கள் வி. பி. யனுப்புவதை கண்டிப்பதற்காக.

கந்தன்:— விகடரே!:— அது சரி. இதனால் விஷயமறிபவர்கள் தானாகவே பணஉதவி செய்யவேண்டுமல்லவா? ஏன் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை?.

விகடர்:— திருவள்ளுவர் உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு யென்று சொல்லியிருக்கிறாரல்லவா? அதைப் பரீக்ஷை பார்க்க.

கந்தன்:— இதனால் பத்திரிகைத் தொழிலி லீடுபட்டோர் என்ன அறிவர்?

விகடர்:— இனிமேல் பணம்பெறாமல் பத்திரிகை அனுப்பக் கூடாது. அப்படி அனுப்பினால் வி. பி. யைத் தர்மகர்த்தாக்கள் திருப்பிவிடுவார்களென்பதை நன்கறிவர்.

ஃ ஃ ஃ

நந்தன்:— கந்தா! வா நாமிருவரும் சத்தியாக்கிரஹம் செய்யலாம்.

கந்தன்:— எது விஷயமாக?

நந்தன்:— பள்ளிக்கூடம் போகாமலிருக்க.

ஃ ஃ ஃ

பரிசோதகர்:— இந்தப் பையனுக்கு ஏன் டிக்கெட் வாங்கவில்லை?

பிரயாணி:— என்ன வயதானால் டிக்கெட் வேண்டும்?

பரிசோதகர்:— 12 வயதானால்.

பிரயாணி:— இவனுக்குப் 10 வயது தானே ஆகிறது.

பரிசோதகர்:— நான் சும்மாசொன்னேன் 6 வயதானால் வாங்கவேண்டும். பணங்கொடு.

பிரயாணி:— என்கையில் காசில்லை. முட்டை வியாபாரி நான். கோழிமுட்டை, வாத்துமுட்டைதான் இரண்டிரண்டிருக்கின்றது.

பரிசோதகர்:— எந்த எழவாவது கொடு.

மதிப்புரை.

அருணாசல மஹாத்மிய வசனம்.

[ஆசிரியர். அருணாசல நிவாஸ ஸ்ரீ. ஈஸ்வர ஸ்வாமிகள். கிடைக்கு மிடம். ஸ்ரீரமணாஸ்ரமம். திருவண்ணாமலை. விலை அணா 0-2-0.]

இதன் பிரதி ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இதனால் திருவண்ணாமலையை அறியவேண்டிய பக்தர்கள் காணக்கிடக்கும் விஷயங்கள் பலவாகும். அத்துடன் க்ஷேத்திரக் காக்ஷிகளும் அங்கு உள்ள சில பெரியார்களின் படங்களும் அடங்கியுள்ளன. ஆத்மலாபம் பெற முயற்சிப்பவர்களுக்கு இது ஓர் சிறந்த சாதனமாகுமாகையால் யாவரும் இதை ஆதரித்தல் அவசியம்.

உள்ளது நாற்பது.

[அநுபந்தத்துடன்.]

[இது திருவண்ணாமலை ஸ்ரீரமண மஹர்ஷி அவர்களால் அருளப் பெற்றது. விலை அணா ஒன்றே. மேற்படியார்கள் ஆஸ்ரமத்திலேயே கிடைக்கும்.]

இதன் பிரதி ஒன்றும் நமது பார்வைக்கு வந்தது. இதன் ஆசிரியர் ஓர் பெரும் ஆத்மஞானியாகையால் அப்பெரியார் ஒவ்வொருவனும் தன்னைத் தான் காண உள்ள நிலையை நாற்பது பாகங்களாகத் தொகுத்து உள்ளது நாற்பதெனப் பாடித்தந்துள்ளார்கள். இது வெண்பாவாக நாற்பது பாக்களும் அநுபந்தமாக 20 பாக்களுங்கொண்ட உயரிய நூல். பக்தர்கள் யாவரும் பார்க்கவேண்டிய ஞானமார்க்கத் திறவுகோலிதுவாகையால் யாவரும் ஆதரித்தல் அவசியமாகும்.

ஸ்ரீஅருணாசலஸ்துதி பஞ்சகம்.

[இதுவும் ஸ்ரீரமண மஹர்ஷி அவர்களால் அருளப்பெற்றதே. இதன் விலை அணா இரண்டு. மேற்படியார்கள் ஆஸ்ரமத்திலேயே கிடைக்கும்.]

இதன் எட்டாம் பதிப்பின் பிரதி ஒன்று நமது பார்வைக்கு வரப் பெற்றோம். இதுவும் முந்திய நூலைப்போன்றே உயர்ந்த முறையில்

அக்ஷரமணி மாலை, பஞ்சரத்னம், பதிகம், அஷ்டகம், பஞ்சகம் ஆதியன அடங்கியன. இத்தியாதி நூல்களைக் குறைந்த விலையிற் செய்து பக்தர்களின் ஆத்ம வளர்ச்சிக்கு உதவி செய்யும் ஆஸ்ரமத்தாரின் கொள்கை போற்றுதற்குரியதாகும்.

ஸ்ரீரமண மஹர்ஷி சரிதம்.

[இஃது ஸ்வாமிகளின் முன்னிலையில் அருணசல நிவாஸ ஸ்ரீஈஸ்வர ஸ்வாமிகள் திருவருட்டுணையுடன் ஸ்ரீரமணீய வாணி புத்தகாலயத்தாரால் பிரசுரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதன் விலை அணா 5. இதுவும் மேற்படியார் ஆசிரமத்திலேயே கிடைக்கும்.]

இப்பிரதி ஒன்றும் நமது கைக்கெட்டிற்று. இதில் ஸ்ரீமஹர்ஷிகள் சரிதம், (நானார்?) என்ற உபதேச மொழிகள். உபதேசவுந்தியார் ஆன்மவித்தை முதலியன அடங்கியுள்ளன. இரு ஆப்டோன்படங்களுமுள்ளன. உயர்நெறியில் முக்திபெறச் சாதனமாக விளங்கும் இப்பரமாத்மாவின் சரிதம் பக்தர்களுக்கு ஓர் சிறந்த நூலாகையால் இதுவும் தமிழர் யாவராலும் ஆதரிக்கப்பட வேண்டுவதே.

விவேக சூடாமணி வசனம்.

[இதுவும் ஸ்ரீரமண மஹரிஷிகள் கண்ட நூலே. விலை அணா 7. மேற்படியார்கள் ஆச்ரமத்திலேயே இதுவும் கிடைக்கும்.]

இதன் நான்காம் பதிப்பின் பிரதி ஒன்று நமது பார்வைக்குக் கிடைத்துள்ளது. இதில் தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரம், திருக்குதிருசிய விவேகம், அத்தாமலகம், குருஸ்துதிகளுடன் ஸ்ரீசங்கர ஜகத்குரு அருளிச்செய்த விவேக சூடாமணி வசனமும் அடங்கியுள்ளது. இரு ஆப்டோன் படங்களுடன் கூடிய இப்புத்தகம் பெரிய ஆத்மார்த்தீகப் பொக்கிஷமாகும். தமிழ்பெற்றோர் தடையின்றிப் பெற்றுப் பயன் பெறச் சிறந்த நூல்களில் இதுவும் ஒன்றே!

மணிவாசகர் சரித்திரம்.

[ஆக்கியோர். திருநெல்வேலி, ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள். வெளியிட்டோரும் விற்பனை செய்வோரும் திருவாளர். இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் அவர்கள். மதுரை. அணா 12.]

இதன் பிரதி ஒன்று நமதுபார்வைக்கு வந்தது. இது திறமையான தமிழாராய்ச்சியாளரான ஆசிரியரவர்களால் தொகுக்கப்பட்டுள்ளதாகையால் பள்ளிக்கூட மாணக்கர்களுக்கும் சரித்திர ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டார்க்கும் ஓர் சிறந்த சாதனமாகும். இப்புத்தகம் மூன்றுபாகங்க

ளாகத் தொகுத்து திருவாதவூரடிகளின் திவ்விய சரிதம் சரியான முறையில் யாவரும் ஐயந்திரிபற ஆதரிக்கும்படி அமைந்துள்ளது. சிறப்பாக மாணாக்கர்களும் ஆசிரியர்களும் அவசியம் பெறவேண்டிய நூல்களில் இதுவும் ஒன்றாகும்.

அருணகிரி நாதர் வரலாறு.

[தொகுத்தவர். கோயமுத்தூர் ஸ்ரீமான். சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள். வெளியிட்டோரும் விற்பனை செய்வோரும் மதுரை ஸ்ரீமான். இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்களே யாகும். விலை அணா 10.]

இதன் பிரதி ஒன்றும் ஆசிரியரவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டு வரப்பெற்றோம். இது திருப்புகழ்ப் பேராசிரியர் ஸ்ரீ அருணகிரிநாதர் வரலாறாகும். நமது நவமணியில் நீண்டநாளாக சரித்திர சம்மந்தமான பல கட்டுரைகள் தருபவரும் கடந்த இருபது ஆண்டுகளாக அத்துறையிலேயே பெரும் உழைப்பு மேற்கொண்டவருமான உயர்ந்த ஒரு ஆசிரியரால் தாம் முன் தொகுத்த அதே நூலையே விரித்தும் ஆழ்ந்தாராய்ச்சி செய்தும் செந்தமிழ் நடையிலும் புதிய வழியில் எழுதப்பட்டுள்ளது. இதுவும் மாணாக்கர், ஆசிரியர், ஆராச்சியாளர், முதலியோர் யாவரும் ஆதரிக்கவேண்டிய சிறந்த நூலாகையால் யாவரும் ஆதரித்து ஆசிரியருக்கும் பதிப்பாசிரியருக்கும் மேலும் மேலும் புதிய புதிய ஆராய்ச்சி நூல்களைத் தமிழுலகிற்குத் தர ஊக்கமூட்ட வழிதேட வேண்டுகிறோம்.

கொ. லெக்ஷுமி புரம்.

சொக்கலிங்க வித்தியாசாலை நான்காவதாண்டு அறிக்கை.

இவ்வறிக்கை யொன்று நமது பார்வைக்கு வந்தது. இச்சிறுவயதிலே இவ்வித்தியாசாலை நாம் காணும் இடங்களிலுள்ள வித்தியாசாலைகள் யாவற்றினுள்ளும் தலைசிறந்து விளங்குவது கண்டு சந்தோஷிக்கிறோம். இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள வித்தியசாலை நிலை; காக்ஷியாளர் அபிப்பிராயம் முதலியவைகளிலிருந்து பலவிடங்களிலும் வீணாகப்பணத்தைச்செலவுசெய்து நிறுவும்ஆடம்பரப்பள்ளிக்கூடங்களை விட இவ்வளவு சிக்கனச் செலவில் நல்ல முறையில் பள்ளிக்கூடங்களை நடத்தவிரும்புவோர் நேரில் ஓர் முறைஇவ்வித்தியாசாலையைக் கண்டு அதன்படிஊர்கள்தோறும்ஒவ்வோர்வித்தியாசாலைஉண்டாக்குவார்களேயானால் மிகுந்த பலனுண்டு என எண்ணுகிறோம். இவ்வித்தியாசாலை இப்பெரும்பேறுபெறக் காரணஸ்தர்களான அதன் ஸ்தாபகர் திருவாளர் ந. சொ. அரு. அருணாசலஞ் செட்டியார், உபாத்தியாயர்கள் முதலானோர்களின் சலியா உழைப்பு போற்றுதற்குரியதாகும். இவ்வாசகசாலை இன்னுஞ் சிறப்புற்று நீண்டநாள் வளம்பெற வாழ இறைவனடி பணிந்து வேண்டுகின்றோம்.

கனகவல்லி.

அல்லது

கள்வர்கவர்ந்த கன்னிகை.

கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

(முன் தொடர்ச்சி.)

அரசர்கள் மீது படைபெடுத்து அவர்களனைவரையும் வென்று தனக்குத் திறைசெலுத்தச்செய்து தான் பேரரசன் எனப் பெருமைபெற நினைத்து கடல்போற் பரந்துள்ள தனது படைகளில் சேவகஞ்செய்யும் சிறந்த வீரர்களில் "அலாவுதீன் மாலிகாபூர்" என்ற சேனைத்தலைவன் கீழ் ஓர் பெரும் படையைக் கூட்டி இந்திய அரசர்கள்மீது வலுவில் போர்தொடுத்து வெற்றிபெற்று வருமாறு அனுப்பினான் அம்மகம்மதிய வீரன் முதன் முதல் உத்தர இந்துஸ்தானத்தின்மீது தனது படையைச் செலுத்தித் தனது போர் ஆண்மையைக் காட்டி ஆங்குள்ள அரசர்களை வென்று தனக்கு அடிபணியுமாறு செய்து பின்னர் தனது திருஷ்டியைத் தட்சிண இந்துஸ்தானத்தின்மீது திருப்பினன். அப்பொழுது தட்சிண இந்துஸ்தானத்தில் இரண்டு நகரங்கள் பிரசித்திபெற்றிருந்தன. அவைகளில் ஒன்று "தேவகிரிராஜயம்" இது மகாராஷ்ட்ர சாம்ராஜ்யம். மற்றொன்று ஓரங்கல். இது வட இந்துஸ்தானத்திற்குச் சரிபாதி எல்லையிலிருக்கும் தட்சிண இந்துஸ்தான சாம்ராஜ்யம். மகம்மதிய சேனவீரன் பிரதாப அக்கினிக்குத் தேவகிரி ராஜ்யம் முதலில் ஆகுதியாயிற்று, அந்த ராஜ்யத்தின் அரசனான 'இராமதேவ'னும் போரில் தோற்றுச் சுவர்கம் புகுந்தான். அதன் பின் அவனது அருங்குமாரன் 'ஹரிபாலதேவ'னும் தந்தைசென்ற வீரருலகத்தைப் பின்பற்றினன். இவ்வீரப்போர் கி. பி. 1309-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இந்நிகழ்ச்சிக்குச் சில மாதங்களுக் கப்பால் நிலாவுபுகழுடைய அலாவுதீன் தனது அளப்பரிய சேனையின் பிரவாகத்தை ஓரங்கல்

கோட்டையின்மீதுச் செலுத்தினன். அது பொங்கிப் புரண்டு பேராரவாரத்துடன் ஓரங்கலின் கோட்டை மதின்மேல் மோதிற்று. வலிமைமிக்க மதிலரணும், கடிய காவலும், நமனுக்கும் அஞ்சா நெஞ்சுபடைத்த தறுகண் வீரரும் சூழ்ந்த அக்கோட்டை அவ்வெள்ளத்தைப் பொருள்படுத்திற்றில்லை. தன்னையும் தனது படைப் பெருக்கையும் வீரர்களின் ஆற்றலையும் அறியாமல் அநீதியாகத் தன் நாட்டின்மீது திடும்பிரவேசமாய் சமர்க்கெழுந்த பகைவன்மீது பிரதாபருத்திரன் பெருஞ்சினங்கொண்டு தனது கோட்டையைத் தாக்கிய தண்டுகளின்மீது படையெடுக்குமாறு தனது படைவீரர்களுக்கு ஆணை தந்தான். போரென்றால் புளகாங்கிதங்கொண்டு முன்வைத்த காலைப் பின்வைக்காமலும், புறமுதுகாட்டி யோடாமலும் உயிரைத் துரும்பென மதிக்கும் சுத்த வீரர்களும், விழுப்புண் படுவதே வீரர்களுக்குப் பெருமையெனக் கருதும் சூரர்களும் ராஜவிஸ்வாசமும் தேசாபிமானமுமே படையாளருக்கேற்ற பண்பு எனக் கருதுவோரும் வேளாளரும் வடுகரும் ரெட்டிகளும் மராட்டியரும் ஆகிய சேவகர்களும் பிரதாபருத்திரனது உத்திரவைக்கேட்டுத் தோள்தட்டிப் பேராரவாரஞ் செய்தும் பகைவர் சேனைகள்மீது பாய்து போர் செய்தார்கள். இருபடைகளும் முனைந்து மூர்க்காவேசத்துடன் சமர்செய்தன. கொடிய இம்மறப்போரில் இருபக்கத்துப் படைகளும் பெருஞ் சேதமடைந்தன. ஆயினும் பிரதாபருத்திரனது படைகள் கூலிக்குழைக்கும் போலிப்படைகள் போலல்லாது தேசாபிமானத்தாலும், ராஜவிஸ்வாசத்தாலும் தூண்டப்பட்டு உறுதியுடன் போர்புரிந்ததால் மகம்மதியப் படைகள் மேலும் பெருஞ் சேதமடைந்து பகைவன் படைகளுக்காற்றாது புறமுதுகு காட்டிப் பறந்தோடின. இதுகண்ட மகம்மதியப் படைத் தலைவன் மாலிகாப்பூர் மனமுடைந்து செய்யும் வகையறியாது நெடுநேரஞ் சிந்தித்து முடிவாக பலம்பெற்ற வேறு பல படைகளுடன் மீண்டும் வந்து போர்செய்து பகைவனை வென்று கோட்டையைச் சுவாதீனப்படுத்துவதே அவசியமான காரியம் எனத்தீர்மானித்து, அந்நிலைமையில் "தலைதப்புவதே தம்பிரான் புண்ணியம்" என்று வழங்கும் மொழிக்கேற்பத் தானும் எஞ்சிய படையுடன் ஓடி

மின்னென மறைந்தான். இது 'அலாவுதீன் மாலிக்காப்பூர்' என்னும் மகம்மதியப் படைவீரனின் முதற்றோல்வி.

இங்ஙனம் ஓடிமறைந்த மாலிக்காப்பூர். கி. பி. 1321-ஆம் ஆண்டு மீண்டும் முன்னிலும் பன்மடங்கு படைகளுடனும் படைவீரர்களுடனும் ஓரங்கல் கோட்டையை முற்றுகையிட்டான். இருபடைகளும் நெருங்கிப் பெரும்போர் செய்தன. சென்ற போரில் மகம்மதியப்படைகள் இறந்ததைவிட இப்போரில் மிகுதியாக மாண்டன. எஞ்சியவர்களும் இறந்தொழிந்தனர். அஞ்சி ஓடியவர்களை அளவிட்டுக் கூறுதல் அரிது. இவ்வாறு இரண்டாமுறையும் தனக்குத் தோல்வி ஏற்பட்டதற்கு அலாவுதீன் அளவற்ற துக்கம் கொண்டான். எவ்வகையிலும் இக்கோட்டையை வெற்றிகாண வேண்டுமென்பதில் அவனுக்கு வைராக்கிய மேற்பட்டது. அதற்குவேண்டிய அருஞ் சூழ்ச்சிகளைச் செய்வதிலேயே அவன் கவனஞ்செலுத்திவந்தான். இறுதியாக இம்முறையுந் தன்னந்தனியனாக ஓரங்கலைவிட்டு அறியாது சென்றான்.

பகைவர் பயங்கரனாகிய பிரதாபருத்திரன் இப்பெரும் போரில் இப்போதும் வெற்றிபெற்று வீரவாகை சூடினான். எனினும், அவனது வெற்றி மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்கள் ஜயமடைந்தது போலிருந்தது. அதாவது:— 'வில்லைவளைத்து குறிதவறாது அம்பெய்வதிலும் பெரும் கதாயுதத்தை வேகமாய்ச் சுழற்றுவதிலும் ஒப்புவமையற்ற பீமார்ச்சுனர்களும் இவர்களில் சற்று குறைவான வில்லாளிகளான தருமர்-நகுலசகாதேவர்களும் இவர்களுக்குத் துணையாக நின்ற பல பராக்கிரமசாலிகளும் அசகாய சூரர்களும் வணங்கா முடியோனாகிய துரியோதனனையும் அவனது வலிமைமிக்க பெரும்படைகளையும் கொன்று குவித்து வீரர்களென வெற்றிமாலை சூடினரேயன்றி, தங்கள் உற்றார்களையும் பந்துமித்திரர்களையும் துணைவர்களையும் மகனையும் இறுதியாகத் தமக்குச் சகோதர உரிமையுள்ள தம்பிமார்களையும் இரணகளத்தில் பலிகொடுத்து மனமாழ்கினர்.' அந்தோ! இத்தகைய வெற்றியால் இவர்கட்கு யாதுபயன்? இவர்களது சௌரியத்தை யார்கண்டு மெச்சுவது? இதுபோலவே தான் பிரதாபருத்திரன் வெற்றியும் அவலமாயிற்று. ஆயின், கீர்த்தி மிகுந்ததெனினும்

பயனில்லை. எங்ஙனமெனின்? "அதுவரையிலும் நிகழ்ந்தபலபெரும் போர்களில் முனை முகத்தில்பகைவருக்கஞ்சாமல் உயிரைத் துரும் பெனமதித்துச் சண்டையிட்டு வெற்றி பெற்ற வீரர்களும் திக்க ஜங்களைப்போல் வலிமை மிகுந்த சூரர்களும் கீர்த்தியினாற் சிறந்த தீரர்களும் சமரில் வீரசுவர்க்கம் புகுந்ததனாலும், அதுகாரண மாக ஓரங்கல் சாம்ராஜ்ய லட்சுமிக்குத்தேர்ந்த துணைவரில்லா தொழிந்ததனாலும், நாடுபலங்குன்றித் தளர்வுற்றுப்போனதனால்".

இங்ஙனம் ஓரங்கல் வலியிழந்து மெலிவுற்றிருப்பதைப் பகை வன் ஒற்றர்மூலம் சிறிது சிறிதாக உணர்ந்தனன். அவன் கண் பெரிய வைரத்தை மனதிற்கொண்டு பழிக்குப்பழி வாங்கவேண்டு மென்ற வைராக்கியத்துடன் அதற்குரிய முன்னேற்பாடுகளுடன் காலத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தானாதால், அவனுக்கு இச்செய்தி பேரானந்தத்தை விளைவித்தது. ஒருசிறிதும் தாழாது முன்னிலும் பலமான பெரும்படைகளைத் திரட்டி அவைகட்குத் திறமை மிகுந்த சேனா வீரர்களைச் சேர்த்து அவர்கட்குத் தேவை யான ஆயுத பலங்களுடன் கடல் பெயர்ந்தெழுந்ததோ! எனக்கண் டோர் கருதும்படி ஓரங்கல் நாட்டின் மீது போர்க்கெழுந்தான் அலாவுதீன் மாலிக்காபூர். இப்போர் மூன்றாவது முறை.

இங்ஙனம் பாராவாரம் போற்பாரித்தெழுந்த பகைவர் படை ஓரங்கல் நகரையடைந்து கோட்டையைச் சமீபித்தது. முதல் இரண்டு யுத்தங்களில் பகைவர் படை முன்னேறிவாதிருப்பதற்கு ஒவ்வோரங்குலந்தோறும், ஒவ்வோரடிதோறும், எதிர்த்து நின்று வழிமறித்துச் சேவகங்காட்டிய வீர சிகாமணிகள் எவருமில்லாத படியால், மாற்றலர் சைநியங்கள் யாதோர் சிரமமுமின்றிக் கோட் டையை முற்றுகையிட்டன. முன் முற்றுகைகளில் முகமதியப் படைகளின் மூர்க்கச்செயல்களுக்கு நிலை குலையாமல் எதிர்த்து நின்று ஓரங்கல் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிய வலிய மதில்கள் தற்போது அவ்வீரர்களின் வெவ்விய பீரங்கி வெடிகளுக்காற்றாது வேடுவரின் வளைந்த வில்லினின்று வேகமாய் வெளிக்கிளம்பி உஷ் ணத்தோடு தாக்குகின்ற கூரிய அம்புகளுக்குத்தாளாது பிராண னிழந்து நிலத்தின் மீது வீழ்கின்ற பறவைகளைப்போல், குபீர் குபீர் எனப் பூமியில் சரிந்து வீழ்ந்தன. (தொடரும்.)

நாற்றிசை நடப்பு.

தொழில்வரி ரத்துச் செய்யப்பட்டது.

சிவகெங்கைத் தாலுகாபோர்டு விஸ்தீரணத்தில் தொழில் வரியை ரத்துச் செய்து விடவேண்டுமென்று வந்த மகசரின் பேரில் சிவகெங்கைத் தாலுகா போர்டார் கவர்ன்மெண்டு சாங்கிஷன்வாங்கி 10-9-31-உயில் மதகுபட்டி முகாமில் ஸ்ரீமான் பி. நா. சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களின் தலைமையில் கூடிய சிவகங்கை தாலுகா போர்டுக் கூட்டத்தில் ஏகமனதாய் அக்டோபர்-மீ முதல் ஷை தொழில்வரியை ரத்துச்செய்ய வேண்டுமாய்ப் பாஸ்செய்து ஷை தீர்மானம் செப்டம்பர்-மீ 26-உயில் மதுரையில் நடந்த இராமநாதபுரம் ஜில்லா போர்டிலும் ஏக மனதாய் ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆகையால் அக்டோபர்-மீ 1-உ முதல் சிவகெங்கைத் தாலுகா போர்டு எல்லையில் இனிமேல் தொழில்வரி கிடையாது.

இந்தியாவின் புதிய வரி விவரங்கள்.

(1) பருத்தியின் மீது பவுண்டுக்கு 6-பைசா இறக்குமதி வரி.

(2) இயந்திரங்களின் மீது 100-க்கு 10-வீதம் இறக்குமதி வரி.

(3) சாயவகைகளின் மீது 100-க்கு 10-வீதம் இறக்குமதி வரி.

(4) பழுப்புச் சர்க்கரை இறக்குமதி வரி அந்தர் 1-க்கு ரூ. 6-12-0-லிருந்து 7-4-0-க்கு உயர்வு.

(5) பூட்ஸ், ½-பூட்ஸ் இவைகளின் மீது மார்கெட் விலைப்படி இறக்குமதி வரி 100-க்கு 20-லிருந்து மார்க்கெட் விலைப்படி 100-க்கு 20 அல்லது ஜதைக்கு 4-அணாவில் எது அதிகமாக இருக்கிறதோ அந்தவரி.

(6) செயற்கைப் பட்டுநூலுக்கு மார்க்கெட் விலையின்மேல் 100-க்கு 15-வீதம் இறக்குமதி வரி. அதாவது 100-க்கு 10-லிருந்து 15-ஆக உயர்வு.

(7) செயற்கைப் பட்டுப் பீஸ்கள், கற்பூரம், எலெக்டிரிக் பல்ப்புகள் ஆகியவைகளின் மீது விதிக்கப்பட்டுவந்த 100-க்கு 20-இறக்குமதி வரி மார்க்கெட் விலையின்மேல் 100-க்கு 40-ஆக உயர்த்தப்படும்.

(8) 1000-ரூபாய்கு மேற்பட்டு 1999-ரூபாய்க் குட்பட்ட வருமானங்களுக்கு இந்த வரவு செலவு வருஷத்தில் ரூபாய்க்கு 2-தம்படி வீதமும் அடுத்த வரவு செலவு வருஷத்தில் 4-தம்படி வீதமும் வரி.

(9) இப்பொழுதுள்ள வருமான வரியில் அரைக்கால் பங்கு இந்த வரவு செலவு வருஷத்திலும் அடுத்த வரவு செலவு வருஷத்தில் கால் பங்கும் அதிகவரி.

(10) உப்பு உள்பட எல்லா கலால் வரிகளில் கால் பங்கு அதிகவரி.

(11) இப்பொழுதுள்ள உள்நாட்டுத் தபால் கட்டணங்கள் 100-க்கு 50-வீதம் உயர்த்தப்படும். அதாவது தபால் கவர்களுக்கு 1½-அணு வீதமும், கார்டுகளுக்கு முக்கால் அணு வீதமும் கட்டணம் வசூலிக்கப்படும்.

அமுலுக்கு வரும் காலம்.

உப்பு உள்பட கலால் வரி உயர்வுகள் செப்டம்பர்-மீ 30-உ காலையிலிருந்து அனுஷ்டானத்தில் வரும். தபால் கட்டணங்களில் உயர்வு இனிமேல் சபையுடன் கூடின கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்படக் கூடிய தேதியிலிருந்து அனுஷ்டானத்தில்வரும்.

திருப்பத்தூர் தாலுகா காரியதரிசி.

திருப்பத்தூர் தாலுகா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி திருவாளர் சி. ராம. இராமநாதன் அவர்கள் காந்தி ஜயந்தியை உத்தேசித்துத் திருப்பத்தூர் தாலுகாவின் முக்கிய ஊர்களில் ஏழு இடங்களில் தற்கால தேசிய நிலைமையைப்பற்றிப் பொதுக்கூட்டங்களில் பலரின் தலைமையில் பிரசங்கம் செய்தார். அவருடன் கூட சில இடங்களில் சொக்கலிங்கம் புதூர் காங்கிரஸ் சபையாரும் திருப்பத்தூர் ஸ்ரீ கிட்டுவையர் வகையார்களும் மானாமதுரை செல்லத்துரை முதலானவர்களும் கலந்து கொண்டனர்.

ஜவுளி மறியல்.

காரைக்குடி சீமைத்துணி மறியல் மீண்டும் வருகிற தீபா

வலியை உத்தேசித்துச் சுறுசுறுப்பாய் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்னும் பலவிடங்களில் சீமைத் துணி மறியலும், கள்ளுக்கடை மறியலும் நடைபெறுகின்றன.

காங்கிரஸ் அங்கத்தினர்.

திருப்பத்தூர் தாலுகாவில் மட்டும் தேசீய சபைக்கு இம் மாதத்துவக்கத்தில் எழுநூற்று எழுபத்தாறு அங்கத்தினர்கள் இருக்கின்றனர்.

காந்தி ஜயந்தி.

திருப்பத்தூர் தாலுகாவின் பல பாகங்களிலும் காந்தி ஜயந்தி மிகச்சிறப்பாக நடைபெற்றதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன சிறப்பாகப் பள்ளத்தூர், கொ. லெக்ஷிமிபுரம், திருப்பத்தூர் சொக்கலிங்கம் புதூர், காரைக்குடி முதலிய இடங்களில் ஊர் கோலங்களும் பிரசங்கங்களும் ஏழைகளுக்கு அன்னதானமும் செய்யப்பட்டது.

கள்ளுக்கடை மறியல்.

சிவகெங்கைத் தாலுகாவில், கள்ளுக்கடை சாராயக்கடைகள் மறியல் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. கள்ளு சாராயக்கடை மறியலால் பல கடைகள் மூடப்பட்டும் பல மூடப்படுவதற்கு ஆயத் தஞ் செய்யப்பட்டு முள்ளனவாம்.

ரப்பர் விலை.

டச்சுக்காரர் ரப்பர் ஒப்பந்தத்திற்கு இணங்காத காரணத் தால் அளவிடமுடியாதபடி விலை குறைந்து விட்டதாம். சமீபத்தில் ரப்பருக்கு விலை உயர்வு உண்டாக வழியிருப்பதாகத் தெரியவில்லை.

காங்கிரஸ் காரியக்கமிட்டி.

அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் அஹமதாபாத்தில் கூடிப்பல முக்கிய தீர்மானங்கள் செய்துள்ளது.

வட்டமேஜை மகாநாடு.

லண்டன் வட்டமேஜை மஹாநாடு சில நாள் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. மீண்டும் நவம்பர்-மீ 5-உ கூடி 10-க்குள் எல்லா அலுவல்களையும் முடித்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பர்மா வட்டமேஜை மஹாநாடு.

இப்பெயர் கொண்டு தனி வட்டமேஜை மஹாநாடொன்று பர்மாவின் நலனைக் கவனிப்பதற்காக வென்று லண்டனில் கூடுகிறது. தனியாக அதற்கு 20 பர்மா வாசிகளுக்கு அழைப்பு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

தங்கம் கப்பலேறுகிறது.

பம்பாயிலிருந்து அயல்நாடுகளில் தங்கம் விலை அதிகமாகவிருப்பதன் நிமித்தம் பல லக்ஷக்கணக்கான ரூபாய் பொறு மதியுள்ள தங்கம் கப்பலில் ஏற்றுமதி யாகியுள்ளதெனத் தெரிகிறது. இவ்வாறே சென்று கொண்டிருந்தால் இந்தியாவில் தங்கமே கிடைப்பதரிது. எனவே, அதைத்தடுக்க முயற்சிக்க வேண்டுமெனச்சில ஸ்தாபனங்களும் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டுள்ளன. ஆனால், தடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

காந்திஜீ-சார்லிச்சாப்ளின்.

மஹாத்மாஜீ இது காலை லண்டனில் பல பெரிய மனிதர்களையும், தொழில் ஸ்தாபனங்களையும், சர்வகலாசாலைகளையும், பார்வையிட்டு வருகிறார். ஆங்காங்கு உற்சாகமாக வரவேற்புகள் அளிக்கப்படுகின்றன. சிறப்பாக இம்மாதம் கண்டவர்களில் முக்கியமானவர்கள் உலகசினிமாவில் உயர் நடிகர்களில் ஒருவரான சார்லிச்சாப்ளினும், பூனாவில் அவருக்கு குடலில் ரண சிகிச்சை செய்த கர்னல் மாடக் அவர்களுமாகும்.

தேவை! தேவை!!

நமது 'நவமணி'க்குத் தமிழ் நாட்டிலும் பர்மாவிலும் சந்தாதாரர்கள் சேர்க்க புதிய ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். திறமையாக வேலை செய்பவர்களுக்குச் செலவிலும் ஒரு பகுதிகொடுக்கப்படும். ஆனால், ரூபாய் இருநூறு ரொக்க ஜாமீன் கட்டவேண்டும். அதற்கு அரை வட்டி கொடுக்கப்படும். அல்லது நம்மை அறிந்தவர்களைக் கொண்டு திருப்திப்படுத்தவேண்டும். இசைந்தவர்கள் உடனே மனுச்செய்துக்கொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்.
நவமணி பத்திரிகாலயம்
பள்ளத்தூர்.

நீங்கள் எலக்டிரிக் வயரிங் செய்ய விரும்புகிறீர்களா?

அப்படியானல் எங்களிடம் ஓர் முறை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள். குறைந்த கூலியில் உயர்ந்தமுறையில் வேலை செய்து தருவோம். எல்லாவகையான எலக்டிரிக் சாமான்களும் சப்ளை செய்யப்படும்.

T. R. ரெங்கசாமி.
பள்ளத்தூர்.

'இந்திய மித்திரன்.'

விளம்பரஞ் செய்வோர்க்கொரு விசேஷச்செய்தி

இந்தியர்களின் குடியேற்ற நாடாகிய மலாயாவில் "இந்திய மித்திரன்" என்னும் பெயருடன் பிரதி புதன்கிழமை தோறும் இரண்டாயிரத்தி ஐநூற்றி லதிகம் பிரதிகளாக வெளியாவதும், முழு மலாயாவின் எல்லாப் பாகங்களில் மட்டுமன்றி, இந்தியா, பர்மா, சிலோன், சயாம், ஜாவா, சுமத்ரா முதலிய வெளிநாடுகளிலும் விசேஷமாகப் பரவியுள்ளதும் மலாயாவிலிதற் கிணையில்லை யெனக் கொண்டாடும் கீர்த்திவாய்ந்தது மாகிய சிறந்த தமிழ்ப் பத்திரிகையில் விளம்பரஞ் செய்வோரே தமது வியாபார விருத்தியை உண்மையிற் கோருவோர்களும், உத்தேச பலனைப் பூரணமாயடையத் தக்கோருமாவார்கள். சந்தாதார்களாகச் சேருவோர்க்கும் சிந்தைகளிக்கத்தக்க செய்திகளனந்த முண்டு. வெளியூர் வருடசந்தா ரூபாய் 7—8—0 விளம்பர விகிதங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதவும்.

மானேஜர், "இந்திய மித்திரன்."
ஈப்போ. (எப். எம். எஸ்.)

Regd. No. M. 2646.

மஹாதேவன் கம்பெனி,

மரச்சாமான்கள் வியாபாரம்,

காரைக்குடி (ராமநாதபுரம் ஜில்லா.)

உயர்ந்த சாமான்கள்! குறைந்த விலை!!

உங்கள் வீட்டை அலங்கரிப்பதற்கு,

எங்கள் கம்பெனியில் எல்லாவித மரச்சாமான்களும் வீடுகளின் உபயோகத்திற்கும் ஆபீஸ்களின் உபயோகத்திற்கும் உயர்ந்த பங்களாக்களை அலங்கரிப்பதற்கும் கலியாணச் சீர்களுக்கும் தகுதியான முறையில் உயர்ந்த சாமான்களைக்கொண்டு உறுதியாயும் வேலைப்பாடுகளுடனும் தேக்கு, தோதகத்தி முதலிய மரங்களில் செய்து வைத்துள்ளோம். விலை மிகக் குறைவு. தயாராக உள்ள தன்னியில் எவ்வித சாமான் வேண்டுமானாலும் மாதிரி காண்பிப்பின் குறித்தகாலத்தில் அதேமாதிரி செய்து கொடுக்கப்படும்.

ஓர் முறை வந்து எங்கள் கம்பெனியைப் பார்வையிடுங்கள்.

கம்பெனி வேலைக்கு உத்திரவாதம்.

Printed & Published by S. RM. Ramanatha Mudaliar,
at Vedhambal Press, Pallatur. (Ramnad Dt.)